தமிழ்த்தடம் அறக்கட்டளை

வெளியீடு



# நற்சித்திரம்

கலை இலக்கிய பண்பாட்டு இதழ்

தை 1, 2053 திருவள்ளுவர் ஆண்டு | சனவரி 14, 2022 வண்ணம்#1 | விலை - ₹ 50



படம்: கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நீண்டதொரு வாள்

## உள்ளே பார்க்க

ஊருண் கேணி
சங்க இலக்கியப் பாடல்வழிப் பயணம்

திருமூலரியல்
தமிழாய்வு

நிறை வாழ்வு பெற
சித்த மருத்துவம்

கோலசுரபி
தொழில்நுட்பம்

என்ன செய்யப் போகிறோம்
சூழல் கட்டுரை



## புத்தகங்களையும் தத்தெடுத்துப் பாதுகாக்கலாம்...

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர்

**திரு. சுந்தர் கணேசன்**

அவர்களுடன் நேர்காணல்

# ஆசிரியர் பக்கம்

**அன்பிற் கனிந்த தமிழுள்ளங்களுக்கு வணக்கம்.**

தமிழ்த்தடம் அறக்கட்டளை சார்பாக நற்சித்திரம் எனும் பெயரமைந்த கலை இலக்கிய பண்பாட்டிதழ், திங்களிதழாகத் தன் பயணத்தைத் தொடங்கியுள்ளது. நமக்கென்று ஒரு படைப்புலகத்தை உருவாக்குவதற்குக் காலம் வழங்கிய நல்வாய்ப்பிற்காக, இந்த ஆசிரியர் குழு எல்லையற்ற பெருமை கொள்கிறது.

மனிதகுலம் சொற்களின் வழியாகவே பெரும்பாலும் தனது அறிவையும் அனுபவத்தையும் ஞானத்தையும் உணர்வையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல சேகரித்து வைத்துள்ளது. சொல் என்பது தன்னளவில் ஒளியேற்றிய ஒரு சுடர். அது காலம் தோறும் புதுப்புது பொருளாக ஒளிர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த ஒளியில் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஒருங்கே தரிசிக்கிறோம்.

தமிழ் வாழ்வு என்பது மனிதகுலத் தொடக்கம் முதலே பண்பால் தனித்துவமாகத் திரண்ட மகத்துவம் கொண்டது. நிலமும் காலமும் வழங்கிய மாபெரும் சிந்தனைகளைத் திரட்டி இலக்கிய, கலை வெளிப்பாடாக அரங்கேற்றித் தன்னைச் செதுக்கிக் கொண்டுள்ளது. அகமென்றும் புறமென்றும் வாழ்வின் இரு கூறுகளும் உணர்ந்து தெளிந்து இலக்கியத்தின் வாயிலாக உலகுக்கு வழி அமைத்துத் தந்துள்ளது.

புறம் என்பது உயிர் காக்கும் போர் நெறியை எடுத்துரைப்பது மட்டுமேயல்ல; உயிர் வளர்க்கும் நீர்நிலைகளைச் சமைப்பதும் பாதுகாப்பதும் உள்ளிட்ட உலக நலனுக்காக வினையாற்றுவதையும் சொல்வதாகும் என உலகிற்குத் தமிழன் சொல்லியிருக்கிறான். அகம் என்பது தலைவன் தலைவி உறவை விதந்தோதுவது மட்டுமேயல்ல; நட்டு வளர்த்த மரத்தையும் உடன்பிறந்தோளாக வரிந்துகொள்ளும் பேரன்பு போன்ற மாண்புகளையும் கொண்டாடுவதுமாகுமென அவன் உணர்த்தியிருக்கிறான்.

இன்றைய நவீன வாழ்வை வழிநடத்த நவீன கலை-இலக்கிய செல்நெறிகளை முறைப்படுத்த இதழினூடாக நமது மரபை இளம் தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டிய பொறுப்பும் தேவையும் நமக்கு மிகவும் கூடியிருக்கிறது என்பதைப் புரிந்துள்ளோம்.

மரபே நமக்கு ஆசான். தனியொருவர் வார்த்தைகளில் இருந்து உருவானதல்ல தமிழர் பண்பாடு. ஊர்தொறும் காலந்தோறும் அறவோரும் சான்றோரும் கண்ட அனுபவத்தைப் பயின்று உருவானதே நம் வரலாறு. 'நான் தழுவிய தலைவன் சான்றோன் அல்லன் போலும்' என்கிறாள் சங்ககாலத்தலைவியொருத்தி. வாசல்தோறும் சான்றோர்களை மலர்த்திய நிலமிது. சான்றோனாக்குதல் மன்னர்க்குக் கடனென்கிறாள் தாயொருத்தி. காக்கும் வழியனைத்தும் தெளிந்தவன் சான்றோன்.

இந்த மண்ணின் நிலை தற்போது மிகவும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது. மனங்களில் வன்மம் மேலோங்கியிருக்கிறது. நுகர்வின் பேராசை நஞ்சென இளந்தலைமுறையிடம் தலைக்கேறியிருக்கிறது. இதற்கு வழிதான் யாது? நாம் யாரென்றும் தற்போது என்ன செய்துகொண்டிருக்கிறோம் எனும் விழிப்பைத்தருவதே தலையாயது ஆகும்.

இலக்கியமே நமக்கு மிகச்சிறந்த ஊடகம். மரபின் உன்னதங்களை வாசகனுக்கு உணர்த்தவும் புதிய படைப்புகளின் வழி தமிழினத்திற்கு வளம் சேர்க்கவும் ஆயிரமாயிரம் முன்னெடுப்புகள் பல்க வேண்டும்.

மரபை அறிந்து பேசிய அறிவர்களைக் கொண்டாடுவதும் நவீனத்தைப் படைக்கும் படைப்பாளர்களை உருவாக்குவதும் வாசகப் பரப்பை செம்மை படுத்துவதும் நாங்கள் எடுக்கும் முயற்சியே இந்த நற்சித்திரம் இதழ்.

இன்றைய சிற்றிதழ்கள் பெரும்பாலும் நம் மரபுச் செல்வங்கள் மீது பாராமுகம் மேற்கொள்கின்றன. மரபையும் நவீனத்தையும் ஒருங்கே இணைக்கின்ற புள்ளியாக ஒரு இதழ் கொண்டு வர வேண்டும் என்பது எங்கள் பெரும் கனவு. இது இலக்கிய வாசகனுக்கான தளமாக மட்டுமே வடிவமைக்க நாங்கள் திட்டமிடவில்லை. தமிழ் இலக்கணம், தமிழர் சமயம், தமிழர் மருத்துவம், தமிழர்த் தொழில், தமிழர்ப் பண்பாடு, தமிழர்க் கலைகள் எனப் பரந்து விரிந்த அனைத்துப் பிரிவுகளையும் உரையாடும் மாபெரும் அரங்காக இந்த இதழை நடத்த ஆவல் கொண்டுள்ளோம். மாணவர்களுக்கென்று தனித்த பக்கங்களை உருவாக்கி அவர்களுக்கான பயிற்சிகள் வழங்க இருக்கிறோம்.

முன்னோர்களின் வழிகாட்டுதலோடு இளம் தலைமுறையை வளர்த்தெடுப்பதே எங்கள் இலக்கு. இந்த இதழ் நம்மைச் செம்மையாக வரைந்துகொள்ள உதவும் திரை மட்டுமே. நீங்களே வண்ணம்; நீங்களே தூரிகை; வருங்காலம் நம்மைப் போற்றிப் படிக்கும் மேலான படைப்புகளே நற்சித்திரம்.

**வாருங்கள்.**
**தமிழருக்காகத் தமிழ் இதழ் செய்வோம்.**
**அதை எந்நாளும் வளர்ப்போம்.**

**நன்றி .**
**ஆசிரியர் குழு**

# நற்சித்திரம்

## திங்களிதழ்

(தமிழ்த்தடம் அறக்கட்டளை சார்பில் வெளிவரும் கலை இலக்கிய பண்பாட்டு இதழ்)


**பதிப்பாளர்:**

தமிழ்த்தடம் அறக்கட்டளை

**ஆசிரியர் குழு:**

**ஆசிரியர்:** மு. பிரபாகர்

**சிறப்பாசிரியர்கள்:**

கவிஞர் இரா.பச்சியப்பன்

முனைவர் திருமூலர் முருகன்

**இணை ஆசிரியர்:** சி.இராஜசேகர்

**துணை ஆசிரியர்கள்:**

ம. பிரதீப்,

சீ. க. லோகேஷ்வரன்,

வி. அருண் நிரஞ்சன்,

ச. முருகராஜ்.

**ஆலோசனைக் குழு:**

பேராசிரியர் முனைவர் பா.இரவிக்குமார்

**இதழ் வடிவமைப்பு:**

தமிழ்த்தடம் அறக்கட்டளை

**தனி இதழ் 50/-**

**ஆண்டு சந்தா: 500/**

**வங்கி விவரம்:**

வங்கி பெயர்: Karur Vysya Bank
வங்கி கணக்கு எண்: 1160 1150 0001 6159
வங்கி கணக்க பெயர்: Thamizhthadam Arakattalai
IfSC குறியீடு: KVBL0001160
GPay : 9342278788



**தொடர்பு முகவரி :**

102/3, மோதிலால் மெயின் ரோடு,
ஆரப்பாளையம், மதுரை 625016

**தொலைபேசி எண்: 93422 78788**

படைப்புகள் மற்றும் வாசகர் கடிதங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
narchithiram@gmail.com

**இணையம்:** - www.thamizhthadam.org

**விளம்பரம் மற்றும் சந்தா விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய**

**தொலைபேசி எண்: 93422 78788**


## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | நேர்காணல் | 4 |
| 2. | கவிதை - கதை சொல்கிறேன் கேளுங்கள் | 7 |
| 3. | சூழல் கட்டுரை - என்ன செய்யப் போகிறோம் | 8 |
| 4. | தொல்காப்பியம் அறிவோம் | 13 |
| 5. | திருக்குறள் பயில்வோம் | 14 |
| 6. | தொடர்கதை - வளர்பிறை | 16 |
| 7. | தமிழாய்வு - திருமூலரியல் | 18 |
| 8. | மாணவர் பக்கம் | 20 |
| 9. | தொழில்நுட்பம் - கோலசுரபி | 21 |
| 1.0 | சித்தவைத்தியம் - நிறைவாழ்வு பெற | 22 |
| 11. | சங்கப்பாடல் - ஊருண் கேணி | 23 |
| 12. | மெய்யியல் | 27 |
| 13. | சிறுவர் சிறுகதை - திலீபன் இட்ட விதை | 29 |
| 14. | சாகித்ய அகாடமி விருது வாழ்த்து | 31 |
| 15. | தமிழின் தடம் பதித்த சான்றோர் - தொல்காப்பியர் | 33 |
| 16. | நூல் அறிமுகம் - புத்தகப்பை - மிதக்கும் உலகம் | 35 |
| 17. | அறக்கட்டளை செய்தி | 37 |


**நற்சித்திரம் இதழின் சந்தா மற்றும் விளம்பர வருமானம் அனைத்தும் அறக்கட்டளை சார்பான நலத்திட்டப்பணிகளுக்கு மட்டும் செலவிடப்படும்.**

**படைப்புகள் மற்றும் கடிதங்கள் அனுப்புவோர் யுனிகோட்(unicode) எழுத்துருவில் மட்டுமே அனுப்ப வேண்டும். தெரிவு செய்யப்பட்ட படைப்புகள் வெளியிடப்படும் விவரம் இரண்டு மாதத்துக்குள் படைப்பாளருக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும். படைப்புகள் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். வேறு எந்த இதழிலோ, இணையதளங்களிலோ சமூக வலைதளங்களிலோ படைப்புகள் வெளியாகியிருக்கக் கூடாது.**

**படைப்புகள் மற்றும் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு தொடர்புடைய எழுத்தாளரே முழுப்பொறுப்பும் தொடர்பும் ஆவார்.**

# புத்தகங்களையும் தத்தெடுத்துப் பாதுகாக்கலாம்...

**ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக இயக்குநர்**

**சுந்தர் கணேசன் அவர்களுடன் நேர்காணல்**

**கேள்வி: ரோஜா முத்தையா அவர்களைப்பற்றி**



**பதில்:** ரோஜா முத்தையா அவர்கள் தற்போதைய சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகில் உள்ள கோட்டையூரைச் சேர்ந்தவர். அவர் எழுத்துப்பலகை எழுதும் ஒரு ஓவியர். ரோஜா ஆர்ட்ஸ் என்ற நிறுவனம் நடத்திவந்தார். அந்தப் பகுதியில் பல முத்தையாக்கள் இருந்ததால், ரோஜா முத்தையா என்ற அடைமொழியுடன் அறியப்பட்டார். புத்தகங்கள் மீதுள்ள பற்றால் புத்தகச் சேகரிப்பிலும் ஈடுபட்டார். சென்னையில் சில காலம் தங்கியுள்ளார். அப்பொழுது சென்னையில் புகழ்பெற்ற மூர் மார்க்கெட்டில் பல புத்தகங்களை வாங்கிச் சேகரித்துள்ளார். ஒரு சமயத்தில் அவரின் சேகரிப்பு எதிர்பாராவிதமாக திருடு போகிறது. அந்தச் சம்பவத்திற்குப் பின் சில சேகரிப்புகளுடன் மீண்டும் கோட்டையூருக்கு சென்றுவிட்டார்.

மீண்டும் புத்தகச் சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவருக்கு, 1981 ஆம் ஆண்டு இலங்கை யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்ட போது, பெரும் மன உளைச்சல் உண்டானது. அந்த நிகழ்வின் தாக்கத்தால், அது போல் நாம் ஒரு நூலகம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு இன்னும் வேகத்தோடு சேகரிப்பில் ஈடுபட்டார். 1940களில் ஆரம்பித்த அவரின் சேகரிப்பு, 1992 ஆம் ஆண்டு அவர் இறக்கும்போது 50000 நூல்கள் , 50000 பிற ஆவணங்கள் என்று 1 லட்சம் ஆவணங்கள் இருந்தன.

**கே: ரோஜா முத்தையா நூலகம் உருவானது பற்றி**



**பதில்:** ரோஜா முத்தையா அவர்களின் கடைசி காலத்தில் , தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் நூலகத்தை வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அப்பொழுது அதை விலை கொடுத்து வாங்க பல்கலைக்கழகம் முன்வரவில்லை. இந்த நூலகத்தை பயன்படுத்திய எழுத்தாளர் அம்பை அவர்கள், ரோஜா முத்தையா அவர்கள் மறைவிற்குப் பின் செய்தித் தாளில் வெளியான நூலகம் விற்பனைச் செய்தியை அறிந்து நூலகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிகாகோ பல்கலைக்கழகம் சென்றிருந்த போது ஒரு நூலகம் விற்பனைக்கு உள்ளது, என்ற செய்தியைத் தெரிவித்தார். அப்போதைய சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிற்றுவித்துவந்த A.K. ராமானுஜம் மற்றும் சிலர் சேர்ந்து, இந்த நூலகத்தைப் பற்றி ஆராய்ந்து, இது ஒரு முக்கியமான நூலகம் என்று முடிவு எடுத்தனர். பல இடங்களில் நிதி திரட்டி வாங்கி, இந்தியாவில்தான் அமைக்கவேண்டும் என்று முடிவு எடுத்தனர். இங்கே பொறுப்பாக பார்க்க ஆள் வேண்டும் என்று மொழி அறக்கட்டளை சிகாகோ பல்கலைக்கழகம் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் ஆனது. இது பத்து ஆண்டுகள் இந்த ஏற்பாட்டில் நடந்தது.

**கே: நூலகத்தின் முதல் இயக்குநர் ஐயா சங்கரலிங்கம் காலத்தில் நூலகத்தின் செயல்பாடுகள் பற்றி**

**பதில்:** 1994 இல் முதல் இயக்குநராக ஐயா சங்கரலிங்கம் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக்கழக நூலகத் துறை ஆசிரியராக இருந்த அவர் மூன்று ஆண்டுகள் விடுமுறை எடுத்து இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்போதுதான் கோட்டையூரிலிருந்து சென்னைக்கு அனைத்து புத்தகங்களும் கொண்டுவரப்பட்டது. அப்போதுதான் நானும் நூலகத்தில் இணைந்தேன். இத்தனை ஆண்டுகள் நூலகத்தோடு நானும் வளர்ந்து வந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த முதல் 3 ஆண்டுகள் மிக முக்கியமானது. சங்கரலிங்கம் அவர்கள் நூலகக் கோட்பாடுகளை முன்வைத்து, புதிய நூலக இயக்கத்தை இந்நூலகம் மூலமாக முன்னெடுத்துச் செல்ல கற்றுக்கொடுத்தார். அதை முன்வைத்து "modern நூற்பட்டி" உருவாக்கினோம் . உலகத் தரத்தில் அந்த நூற்பட்டியை மார்க் 21 முறையில் உருவாக்கினோம். இதில் மிக முக்கியமான விடயம்,

நாங்கள் தொடக்கம் முதலே காகிதத்தில் எழுதாமல் கணினியில் நூற்பட்டி உருவாக்கினோம். அந்தக் காலகட்டத்தில் கணினியும் புதிது, அதுபோக கணினியில் தமிழ் மிகவும் சிரமம். அனைத்து புத்தகங்களுக்கும் கணினி மூலம் , தமிழிலே நூற்பட்டியல் தயாரித்தோம். நாங்கள் தமிழில் பதிவேற்ற ஒரு காரணம் இருந்தது, அது தமிழில் பட்டியலிட்டால்தான் பிழை இல்லாமல் நாம் உபயோகிக்க முடியும் என்பது. உதாரணத்திற்கு, திருவள்ளுவர் என்ற பெயரை தமிழில் ஒன்றுபோலவே எழுதுவோம்; ஆனால் ஆங்கிலத்தில் பலவிதமாக எழுத முடியும். ஆகவே தமிழில் நூற்பட்டி உருவாக்கினோம்.

1995 முதல் நுண்படம் எடுக்க ஆரம்பித்தோம். நான் நூலகத்தில் நுண்படம் எடுக்கும் பிரிவை உருவாக்குவதற்காகத் தான் நூலகத்தில் சேர்ந்தேன். தொடர்ந்து 10 ஆண்டுகள் நுண்படம் எடுத்தோம். 1997 இல் எதிர்பாராத விதமாக ஐயா சங்கரலிங்கம் அவர்கள் இயற்கை எய்தினார். ஐயா சங்கரலிங்கம் காலத்தில் தயாரித்த குறிப்பிட்ட அளவிலான நூற்பட்டியை 1998 இல் இணையத்தில் வெளியிட்டோம். 1998 வரை நூலகத்தில் இருந்த புத்தங்ககளை ஒழுங்குபடுத்தும் வேலையைச் செய்தோம், அப்போது புதிதாக ஏதும் சேகரிப்பில் ஈடுபடவில்லை.

**கே: சங்கரலிங்கம் அவர்களின் காலத்திற்குப் பின் நூலகம் சென்ற பாதை பற்றி கூற முடியுமா?**

ப: சங்கரலிங்கம் அவர்களுக்குப் பிறகு, தலைமை தபால் அதிகாரியாக இருந்து ஒய்வு பெற்ற தியடோர் பாஸ்கரன் அவர்கள் 1998 முதல் 2000 வரை 3 ஆண்டுகள் நூலகத்தின் இயக்குனராக இருந்து நூலகத்தை வழிநடத்தினார். அவரது காலகட்டத்தில் தமிழ்நாடு ஆவண காப்பகத்திலிருந்து நூல்களை எடுத்து நுண் படங்கள் எடுத்தோம். அதே நேரம் 'மொழி அறக்கட்டளை' நூலகப் பராமரிப்பில் இருந்து விலகிக் கொண்டது. நூலகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு நான், ஐயா தியடோர் பாஸ்கரன் மற்றும் பேரா. அப்துல்கலாம் ஆகியோர் இணைந்து "ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை "என்ற பெயரில் அறக்கட்டளையை உருவாக்கினோம். சிகாகோ பல்கலைக்கழகத்தோடு நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கையெழுத்திட்டோம். 2000ஆம் ஆண்டு தொழில்நுட்பம் மேம்படும்போது, ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்க ஆரம்பித்தோம். ஏற்கனவே இருந்த நுண் படங்களை டிஜிட்டல் மயமாக்கக் கருவிகள் வாங்கினோம். நுண் படங்களையும் டிஜிட்டல்மயம் ஆக்கிவிட்டோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிந்தபோது, சிகாகோ பல்கலைக்கழகம் விலகிக் கொண்டு, ரோஜா முத்தையாவின் அனைத்து ஆவணங்களையும் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கியது. இடையிடையே வேகத்தோடு நூல் சேகரிப்பில் ஈடுபட்டோம். 1994 ஆம் ஆண்டு 1 லட்சம் எண்ணிக்கையில் இருந்த ஆவணங்கள் தற்போது 4.5 லட்சம் என வளர்ந்துள்ளது. புத்தகங்கள் , இதழ்கள் , நூல் சாரா ஆவணங்கள் (சினிமா போஸ்டர், விழா / திருமண அழைப்பிதழ்கள்) இதில் அடங்கும். நூல்சாரா ஆவணங்கள் மட்டும் ஒரு லட்சம் இருக்கும். தற்போது, இந்த நூலகம் முழுமையாக அறக்கட்டளைக்கு சொந்தமானது. அறக்கட்டளை மூலம் நூலகத்தின், வேலையாக ஆவணங்களை பட்டியலிடுவது , நூல்களைப் பாதுகாப்பது போன்ற பணிகளில் ஈடுபடுகிறோம். அதுமட்டுமின்றி ஆய்வுக்கு வருபவர்களுக்கு, அவர்கள் கேட்கும் ஆவணங்களை எடுத்துக் கொடுத்து உதவுவது, ஆவணங்கள் பற்றிய தகவலை வலைதளம் , தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் கேட்பவர்களுக்கு உதவுவது என்று நீண்டு கொண்டே போகிறது. தொடக்க காலம் முதலே காலத்துக்கேற்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வந்துள்ளோம்.

**கே:நூலகத் துறையில் தனியார் நூலகங்களின் பங்களிப்பு பற்றி உங்கள் கருத்து.**

ப: பல தனியார் நூலகங்கள் உள்ளன. அரசு நூலகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களை விட தனியார் நூலகங்களில் இருக்கும் தமிழியல் ஆவணங்கள் விசாலமானது. முனைவர் பட்டம் பெற்ற 90 சதவீதம் பேர் தனியார் நூலகங்களின் உதவியோடுதான் பட்டம் பெற்றுள்ளனர். நான் அவ்வப்போது அரசிடம் வைக்கும் ஒரு கோரிக்கை, அரசு இது மாதிரி நூலகங்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டும், தேவைப்பட்டால் எடுத்து நடத்தவேண்டும். குறிப்பிட்டுச் சொல்லும்படியாக, உ. வே. சாமிநாதையர் நூலகம், புதுக்கோட்டை ஞானாலயா நூலகம், விருத்தாசலம் மற்றும் காரைக்குடி என்று பல தனியார் நூலகங்கள் உள்ளன. மறைமலை அடிகளார் நூலகம் என்று ஒன்று இருந்தது, அதை கன்னிமாரா நூலக கட்டிடத்தின் ஒரு பகுதியில் வைத்துள்ளனர். நாங்கள் ஒரு கட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் மாவட்டந்தோறும், உள்ள தனியார் நூலகம் மற்றும் சேகரிப்பாளர்களிடம் அவர்களால் பாதுகாக்க முடியாத புத்தகங்களை எங்களிடம் வழங்குமாறு கேட்டுக் கொண்டோம். சிலரிடம் 500 புத்தகம் இருக்கும், சிலரிடம் 2000, சிலரிடம் 10000 புத்தகங்கள் இருந்தன. அனைத்தையும் வழங்கினார்கள் . அப்போதுதான், தமிழ் இலக்கிய வரலாறு , தமிழ் இசை வரலாறு எழுதிய தமிழ் அறிஞர் மு அருணாச்சலம் அவர்களின் சேகரிப்பை அவரின் குடும்பத்தார்கள் எங்களுக்கு வழங்கினார்கள், அது மிகவும் முக்கியமான சேகரிப்பு. ஐராவதம் மஹாதேவன், சம்பகலட்சுமி, தெ.பொ.மீனாட்சிசுந்தரம் உள்ளிட்ட பலரின் சொந்த சேகரிப்புகள் நமது நூலகத்தில் தான் உள்ளன.

**கே: இத்தனை தனியார் நூலகங்களில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிறப்பு என்று நீங்கள் கருதுவது –**

ப: ரோஜா முத்தையா அவர்கள், தொலைநோக்குப் பார்வை கொண்டவர். அவர் ஒரு நூலின் முதல் பதிப்புகளைச் சேகரித்தார், அதோடு நிற்காமல் அதன் பிறகு வெளிவந்த பதிப்புகள் அனைத்தும் சேகரித்தார், அதனோடும் நிற்காமல், அதே தலைப்பில் வேறு வெளியீட்டாளர்களின் பதிப்பகளையும் சேகரித்தார். இதுபோல் ஒரே இடத்தில் அனைத்தையும் பார்ப்பது மிக அரிது. உதாரணமாக, செவ்வியல் இலக்கியத்தை எடுத்துக்கொண்டால், செம்மொழி ஆய்வு மையம் 41 தலைப்புகள் இருப்பதாக கூறுகிறது. அந்த அனைத்து தலைப்புகளையும் நமது நூலகத்தில் பார்க்கலாம். யுனெஸ்கோ நிறுவனம் ஒரு நூலுக்கான வரையறையை நிர்ணயித்துள்ளது. பொது நூலக நிறுவனங்கள், நூல் சாரா ஆவணங்களைச் சேகரிப்பதில்லை. நமது நூலகத்தில் நூல் சாரா ஆவணங்கள் இருப்பது மற்றொரு சிறப்பு.



இதனோடு அவ்வப்போது சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் , கண்காட்சிகள் என்று, ஒரு நூலகத்தின் பணியான அறிவுப்புலத்தை பரவலாக்கும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இரண்டு ஆய்வு மையங்கள் நடத்தி வருகிறோம். சிந்துவெளி ஆய்வு மையம் மற்றும் பொதுவியல் ஆய்வு மையம்.

கே: சிந்துவெளி ஆய்வு மையம் மற்றும் பொதுவியல் ஆய்வு மையம் பற்றி இன்னும் விரிவாகச் சொல்ல முடியுமா ?

ப: 2007 ஆம் ஆண்டு திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களின் ஆலோசனைப்படி சிந்துவெளி ஆய்வு மையம் தொடங்கினோம். சிந்துவெளி எழுத்துகளை தொழில்நுட்ப முறையில் அணுக, கண்டறிய எங்களுக்குப் பயிற்சி கொடுத்தார். சிந்துவெளி மக்களின் பண்பாடு, நாகரிகம், மொழி, வாழ்வியல் பற்றி ஆராய்ந்தார். அவருக்குப் பின் திரு. ஆர். பாலகிருஷ்ணன் மதிப்புறு ஆலோசகராக இருக்கிறார். தன்னார்வத்தில் அவர் பல வருடம் சிந்துவெளி ஆய்வு மேற்கொண்டு இருந்தார், நமது ஆய்வு மையத்திற்கு அவரின் பங்கு மேலும் வலு சேர்த்தது. அவரின் ஆய்வுகளைத் தொகுத்து ***Journey of a civilization - Indus to vaigai*** என்ற நூலாக வெளியிட்டோம்.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களின் தொடரடைவு, 775 பக்கங்கள் இருக்கும் புத்தகத்தை இணையத்தில் எளிதாகத் தேடி உபயோகிக்கும் வகையில் *www.indusscript.in* என்ற இணையதளத்தில், தமிழக தொல்லியல் துறை நிதி உதவியோடு வெளியிட்டோம். அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இதை வெளியிட்டார். தமிழக தொல்லியல் துறையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளோம், அதன்மூலம் பயிற்சிகள் நடத்துவது, புத்தகங்கள் வெளியிடுவது என்ற செயல்களில் இணைந்து ஈடுபட உள்ளோம். அடுத்ததாக ஐராவதம் மகாதேவன் மற்றும் அஸ்கோ பர்போலா ஆகியோரின் ஆராய்ச்சியை இணைத்து ஒரு பொது தேடுதளத்தைத் தயார் செய்ய நினைக்கிறோம், அதற்கான நிதி உதவி கிடைத்தால் அதையும் செய்வோம். இவையெல்லாம் சிந்துவெளி ஆய்வு மேற்கொள்பவர்களுக்கு ஒரு சிறந்த கருவியாகப் பயன்படும். .

சிந்துவெளி ஆய்வு மையம், வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மையை ஆய்வு செய்கிறது எனில் பொதுவியல் ஆய்வு நவீன கால வரலாறு பற்றியது. 1857 ஆண்டு முதல் தற்காலம் வரை பொதுவெளியில் அறிவுசார் தளத்தைப் பயன்படுத்தி, சமூகத்தின் மாற்றத்திற்குக் காரணமான ஆளுமைகள் பற்றி இதில் ஆய்வு செய்கிறோம். இதன் தலைமைப் பொறுப்பை தி இந்து பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்ற திரு. A.S. பன்னீர்செல்வன் ஏற்றிருக்கிறார். தமிழ்ச் சமூகத்தில் அறிவுசார் அறிஞர்கள் இல்லை என்ற கருத்து பரப்பப்படும் நிலையில், அதற்கு எதிரான மாற்றுகருத்தை முன்வைப்பதே முதன்மையானதாகும். உதாரணமாக, வள்ளலாரை ஒரு சமயம் சார்ந்தவர் என்பதே பெரும்பான்மை மக்களின் பார்வையாக உள்ளது. அவர் தமிழுக்கும், தமிழ் அறிவுலகிற்கும் அவர் செய்த தொண்டு பற்றி யாரும் பெரிதாக பேசவில்லை. ப சரவணனின் அருட்பா மருட்பா இந்தத் தலத்தில் ஒரு சிறந்த படைப்பு. அவரின் கருத்துகள் பின் வந்த இயக்கங்களுக்கு எப்படி தாக்கத்தை ஏற்படுத்தியது என்று வெளிக்கொண்டுவர இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளோம்.

கே: பழைய நூல்களை எங்ஙனம் பாதுகாக்கிறீர்கள்

ப: அதற்கென்று ஆய்வுக்கூடம் வைத்திருக்கிறோம். காகிதத்திற்கு என்று ஒரு கால அளவு உண்டு. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அவை உடையக்கூடும். அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால் அதில் உள்ள அமிலத் தன்மையும் தரம் குறைந்த தாளினை பயன்படுத்துவதும் தான். இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்ட தாள்கள் மிகவும் தரம் வாய்ந்தவை. இப்பொழுது தயாரிக்கப்படும் தாள்கள் மிகவும் பலவீனமானவை. அந்தக் காலத்தில் தாள்கள் தயாரிக்கும் முறை மிகவும் நேர்த்தியானதாகவும் தரமானதாகவும் இருந்தது. தற்போது தாள்கள் அதிகமாகத் தயாரிக்க வேண்டிய தேவையும் வெள்ளை நிறமாக இருக்கவேண்டும் என்கிற எண்ணமும் மேலோங்கி இருப்பதனால் அதற்கென்று சில அமிலங்களைச் சேர்த்து தயாரிக்கிறார்கள். அது பிற்காலத்தில் காற்றுடன் கலந்து தாள்களின் நிறம் மங்கி உடையத் தொடங்கிவிடுகிறது.
எனவே நாங்கள் முதலில் அந்தத் தாள்களில் உள்ள அமிலத் தன்மையை நீக்கி விடுவோம். அதன் பிறகு அதைப் பலப்படுத்துகிறோம். ஒவ்வொரு தாளையும் இவ்வாறு செய்கிறோம். அதற்குச் சில காலம் பிடிக்கிறது. அத்துடன் செலவும் அதிகம். இதன் காரணமாகத் தற்போது ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். அதாவது நூல்களை யார் வேண்டுமானாலும் தத்தெடுக்கலாம். இதைப் பாதுகாப்பதற்கான அடிப்படை பணிகள் செய்வதற்கு, தோராயமாக ஐயாயிரம் ரூபாய் ஆகிறது எனில், அதற்கான செலவைத் தந்து தத்தெடுக்கச் சொல்கிறோம். பலர் முன்வந்துள்ளனர். அவ்வாறு நூலைப் பாதுகாக்கும் பட்சத்தில் இன்னும் இருநூறு ஆண்டுகள் அதனை நாம் பத்திரப் படுத்தலாம்.

கே: இந்த முறையை அறிமுகப்படுத்திய பின்னர் எவ்வளவு நூல்கள் அவ்வாறு தத்தெடுக்கப்பட்டிருக்கின்றன?

ப: சற்றேறக்குறைய 500 நூல்கள் அவ்வாறு தத்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நிறுவனம் தனியாக 100 புத்தகங்களுக்கான செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறது. தனிநபர்கள் சிலர் ஒரு புத்தகம் முதல் 10 புத்தகம் வரை தத்தெடுத்திருக்கிறார்கள். நமது புத்தகங்களைப் பாதுகாக்க, பலரும் இதுபோல் முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.



கே: சுவடிகளைப் பாதுகாக்கிறீர்களா? அதற்குத் தனியாக எந்த பாதுகாப்பு முறையை பயன்படுத்துகிறீர்கள்?

ப: புத்தகங்களைத் தேடிச் செல்லும் போது சுவடிகளும் கிடைப்பதுண்டு. அதையும் நாங்கள் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். எனினும் நாங்கள் சுவடிகளின் மீது அதிகக் கவனம் செலுத்திச் சேகரிக்கவில்லை. கிடைத்தவற்றைப் பாதுகாத்து வைத்திருக்கிறோம்.

*நேர்காணல்:* **ஆசிரியர் குழு**

***(இன்னும் சில பதில்கள் அடுத்த இதழில்...)***

# கதை சொல்கிறேன் கேளுங்கள்

(கவிதை)

- ரௌத்திரன்

காலத்தினால் அழியாததொரு,
காரிருளிலோ, காற்றிலோ மழுங்காததொரு,
காப்பியக் கற்பனை அல்லாததொரு,
கதை சொல்கிறேன் கேளுங்கள்..!
போர்க்குணம்,புத்திக்கூர்மை,
மார்புகீறி புதைத்த கதை,
மானுடன் மரபுவழி
மாயாத ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்..!

முடி தொட்டு அடி வரை
மொத்தமும் கருப்பு,
வாளே வளைந்துவிடும்,
வளரி போன்ற தேகம்..!
கரிய கள்ளன் என்றும்,
வீரிய மறவன் என்றும்
ஆயிரம் அடைமொழி உடையோன்..!
அறிவிற்குக் கூர்மை யுடையோன்..!

எட்டு அல்ல, எண்பதாயிரம்
எட்டும் திசைகள் ஏதும்
எம்பாட்டனனின் கால்தடம்,
என் ஈசனின் இறைத் தலம்,
அன்பினால் ஆண்டவனை
அகிலமே ஆண்டவன்
கட்டிப் போட்ட காலம் அது,

இன்னிசை தமிழ் தோய்த்து
இருநூற்றி நாற்பத்தேழு எழுத்துமிட்டு
ஈசனே இறை அருளே
என்நிழல் காப்பவனே
எத்துணை தேடினும்
என்னுள் உதிப்பவனே
எண்ணித் தீரா எண்களில் என்னை,
எடுத்தெழுதும் எம்பெருமானே
என்றெல்லாம் மறை படித்து
காவிரி படுகை ஓரம்
கடவுளுக்கே கட்டளையிடுகிறான்..!
ஆழத் தோண்டியதென்ற அஸ்திவாரம் கிடையாது,
அழகுப் பார்வைக்கென்ற வல்லுநர்கள் கிடையாது,
அவன் நினைத்தான்,
அவன் தொடுத்தான்,
அவனே எடுத்தான்..!!
காவிரி கரை தொட்டு


ஓவியம்: மருது

கால்நூறு மைல்கள் கடந்து
களிறு கொண்டு கல்சுமந்தான்..!

பெருமளவில் எடையளவு எண்பது,
எத்தாட்டியனும் அசைக்கமுடியா ஒற்றைக்கல் அது,
எம்பாட்டன் எடுத்தான்
அதை அசைத்தான்
கண்கள் செந்தீயாய், கால்கள் நோவ
காவிரி நீர் மூழ்கி
கல்லில் சிற்பம் உருவாக்கி- அதில்
கடவுளை அமரச்சொல்லி கட்டளையுமிட்டான்...!

எண்ணூறு ஆண்டுகள் முன்பல்லவா-
அன்று
எந்நாகரிகமும் தமிழில் அடங்கிற்று
எம்பெரும்பாட்டன் சிந்திய இரத்தம்
எந்நாட்டவனையும் சேர்ந்திற்று..!
இத்தோடு முடிவதல்ல என்று
அன்றே எண்ணியிருப்பான் போல,
அதுதான் இன்றும் என்னை
எழுத்தால் புலம்பச் செய்தது..!

தமிழமுதால் தொண்டை நனைத்து
தேவாரம் , திருவாசகம் தெளிவே பாடி
திருநீரால் உடல் மொழுகி
தீர்த்தமென்ற காவிரியில் நனைந்த
என் மனமும் உடலும்
ஈசன் அருளால் இறைபடித்தது
பாட்டன் கதையில் சிறைபட்டது..!
சோழ தேச பிரம்மிப்பின் மீதான
தீராக் காதலுடன்.... நானும், என் எழுத்துக்களும்....!!

# என்ன செய்யப் போகிறோம்

(சூழல் கட்டுரை)

**- பிரபாகரன் வீர அரசு**

**சிகரெட் பிடித்தலை விட, காச நோய் / எய்ட்ஸ் போன்ற வியாதிகளை விட அதிகமாக மனித ஆயுளை குறைக்கிறது காற்று மாசு - *AQLI* ஆய்வறிக்கை**

தற்பொழுது நிலவிவரும் காற்று மாசின் அளவுகள் அப்படியே தொடர்ந்தால், ஏற்கனவே காற்று மாசுபாட்டில் மோசமான நிலையில் உள்ள இந்திய பெருநகரங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் வாழ்நாளில் 9ஆண்டுகளை இழக்க நேரிடும் என்கின்றது சமிபத்திய AQLI (Air Quality Life Index ) ஆய்வறிக்கை.

உலக மக்கட்தொகையில் நான்கில் ஒரு பங்கு கொண்ட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம் போன்ற நாடுகள் மிகவும் மோசமாக காற்று மாசடைந்த நாடுகளின் பட்டியலில் தொடர்ச்சியாக முதல் ஐந்து இடங்களில் உள்ளன. உலகின் மிக மோசாமான நாற்பது நகரங்களின் பட்டியலில் முப்பத்தேழு நகரங்கள் தெற்காசிய பிராந்தியத்தில்தான் உள்ளது. மிகவும் மோசமான காற்று மாசடைந்த நகரங்களில் 185 கோடி மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் தங்கள் ஆயுள் காலத்தில் சராசரியாக ஐந்து ஆண்டுகளை இழப்பதாகவும், உலகம் முழுவதும் காற்றின் மாசு காரணமாக சராசரியாக மனித ஆயுள் 2.2 ஆண்டுகள் குறைவதாகவும், டெல்லி , கொல்கட்டா போன்ற இந்திய நகரங்களில் காற்று மாசு காரணமாக மனித ஆயுள் காலம் 9 ஆண்டு காலம் குறைவதாகவும் இந்த AQLI ஆய்வறிக்கை கூறுகிறது.

இது சிகரெட் பிடித்தலை விட, காச நோய் / ஏய்ட்ஸ் போன்ற வியாதிகளை விட அதிகமாக மனித ஆயுளைக் குறைக்கிறது.

மற்ற நச்சு வாயுக்களைக் காட்டிலும் காற்றில் இருக்கக் கூடிய நுண் துகள்களை சுவசிப்பத்தின் மூலமே மக்களின் ஆயுள் காலம் குறைவதாக இந்த ஆய்வறிக்கை கூறுகிறது. காற்றில் நுண்துகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது அனல் மின் நிலையங்கள், வாகனப் புகை, நச்சாலைகள் முதலியன முதன்மையானவை.

இந்தியாவில் கடந்த இருபது ஆண்டுகளில் காற்றில் நுண்துகளின் பெருக்கம் அபாயகரமான அளவுகளில் நாடு முழுவதும் பரவலாக அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக வட இந்தியாவில் உள்ள 480 மில்லியன் மக்கள் உலகத்தில் மற்ற இடங்களில் இருப்பதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிக மாசடைந்த காற்றைச் சுவாசிக்கிறார்கள். வட இந்திய மாநிலங்கள் மட்டுமல்லாமல் தற்பொழுது மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் வசிப்பவர்களும் காற்று மாசினால் பாதிப்படைந்துள்ளனர். நுண்துகள் அளவுகள் பல மடங்கு அதிகரித்துக் காணப்படும் சென்னை போன்ற தமிழக நகரங்களுக்கும் சேர்த்தே விடப்பட்டிருக்கும் எச்சரிக்கை இதுவாகும். இந்திய காற்று தர நிர்ணய அளவீட்டின் படி காற்றில் நுண்துகளின் அளவு 60 µg/m3 க்குள் இருத்தல் வேண்டும். இதுவே உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) காற்று தர நிர்ணய அளவு. ஆனால் சென்னையின் பல பகுதிகளில் நுண் துகளின் அளவு 60 µg/m3 அளவை விட அதிகமாக உள்ளதாக Health Energy Initiative நடத்திய ஆய்வின் முடிவில் நமக்கு தெரிகிறது.

குறிப்பாக திருவொற்றியூர், காசிமேடு, மீஞ்சூர்,



**ஓவியம்:**
**பி. ஹம்ச குரு லியோனார்டு.**
5ம் வகுப்பு . கேரன் மெட்ரிக் பள்ளி,
உசிலம்பட்டி.

கொடுங்கையூர், எண்ணூர், மணலி, அம்பத்தூர், தி.நகர், வேளச்சேரி, ஆகிய பகுதிகளில் இந்த ஆய்வில் பொழுது நுண்துகள் 60 µg/m3 முதல் 128 µg/m3 வரை இருந்துள்ளது. அதே போல் பாரிமுனை , வியாசர்பாடி போன்ற பகுதிகளில் நுண்துகளில் அளவு 176 µg/m3 முதல் 228 µg/m3 வரை பதிவாகியுள்ளது.

சென்னையின் காற்றின் தரம் இப்படி இருக்கையில், நுண்துகளின் அளவை உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள 25 µg/m3 அளவுக்கு குறைத்தால் தற்பொழுது இருப்பதை விட மனித ஆயுளை 5 ஆண்டுகள் அதிகரிக்கலாம் என்று AQLI அறிக்கை வலியுறுத்துகிறது.

இது நடைமுறையில் சாத்தியமா என்ற கேள்விக்கு, சீனாவின் காற்று மாசுக்கு எதிரான நடவடிக்கைகள் நமக்கான பதிலாக நிற்கின்றன. 2013ம் ஆண்டு தொடங்கி காற்று மாசை சீன அரசு தீவிரமாக கட்டுபடுத்தியதின் விளைவாக தற்பொழுது அது 29% நுண்துகளை கட்டுப்படுத்தியுள்ளது. இதே போல் இந்தியாவும் அனல் மின் நிலையங்கள் மற்றும் வாகனப் புகை ஆகியவற்றை கட்டுக்குள் கொண்டு

வருமானால் இந்திய மக்களின் ஆயுள் காலமும் 5 ஆண்டுகள் அதிகரிக்க கூடும். இதற்கு பல்வேறு ஒருங்கிணைந்த காற்று மாசு குறைப்பு முன்னெடுப்புகள் தேவை என்றாலும் காற்று மாசு குறைக்க குறிப்பிட்ட சில துறை சார்ந்த கொள்கைகளை வகுப்பதும் இந்தியாவிற்கு அவசியமாக உள்ளது. முக்கியமாக இந்தியாவின் மின் கொள்கை புதைப்படிம எரிசக்தியில் இருந்து புதுபிக்கத்தக்க ஆற்றலை நோக்கி மாறுவது தற்போதைய அவசரத் தேவையாக உள்ளது. 2019ஆம் ஆண்டு டெல்லி காற்று மாசைக் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறிப்பிடும்பொழுது

"ஒவ்வொரு முறை காற்றின் தரம் மிக மோசமாக செல்லும்பொழுதும் அதைக் கட்டுப்படுத்த தற்காலிக நடவடிக்கைகள் தான் எடுக்கப்படுகிறது, ஆனால் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நீண்டகால அளவிலான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆனால் தற்போது டெல்லி காற்று மாசு பற்றி விசாரித்து வரும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் உடனடித் தற்காலிக நடவடிக்கைகளாவது எடுத்து இரண்டு நாட்களுக்குள் காற்று மாசைக் கட்டுக்குள் கொண்டு வாருங்கள் என்றும் நீண்டகாலச் செயல் திட்டங்கள் பற்றி பின்னர் யோசிக்கலாம் என்றும் டெல்லி அரசை கேட்டுக் கொண்டுள்ளனர்.


காற்றின் தரம் இவ்வளவு மோசமாக இருக்கும் பொழுது மக்கள் எப்படி வாழ முடியும், காற்றின் தரத்தை 500AQI லிருந்து 200AQI க்கு இரண்டு நாட்களில் எப்படி கொண்டு வரப் போகிறீர்கள்? இரண்டு நாட்கள் பொது முடக்கம் நடைமுறைப்படுத்துவது பலனளிக்குமா என்று உச்சநீதிமன்றமே தற்காலிக தீர்வுகளைக் கேட்குமளவுக்கு டெல்லியில் காற்றின் தரம் 2021 குளிர் காலத்தில் அபாயகரமாக மாறியுள்ளது.

இதனை அடுத்து குழந்தைகள் பாதிப்பதைத் தடுக்கும் வகையில் டெல்லியில் உள்ள பள்ளிகளுக்கு ஒரு வார காலம் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நுண் துகள் அளவுகளைக் குறைப்பதற்காக கட்டுமானப் பணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலக ஊழியர்கள் வீட்டிலிருந்தே இயங்குவதற்கும் தனியார் நிறுவனங்கள் 30 சதவீத ஊழியர்களுடன் அலுவலகத்தில் இயங்குவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் கல்குவாரிகளுக்கும் செங்கல் சூளைகள் இயங்குவதற்கும் ஒரு வாரம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயல்பாடுகள் ஒருபுறம் இருந்தாலும் டெல்லியின் காற்று மாசுக்கு காரணமாக மீண்டும் மீண்டும் பஞ்சாப் அரியானா விவசாயிகளேயே குறை கூறி வருகிறது டெல்லி அரசு.

டெல்லி காற்று மாசு என்பது ஏதோ குறிப்பிட்ட காலப் பிரச்சினை (seasonal issue) அல்ல, ஆண்டு முழுவதுமே டெல்லியில் காற்றின் தரம் மோசமாகத்தான் உள்ளது. அக்டோபர் - நவம்பர் மாதத்தில் தீபாவளிப் பட்டாசு புகை, வாகனப் புகை



கட்டுமானப் புகை , தொழிற்சாலைப் புகை , அனல் மின் நிலையங்களில் இருந்து வெளிவரும் புகை, விவசாயப் பொருட்கள் எரிப்பதனால் வரும் புகை இதனுடன் காற்றின் ஈரப்பதமும் சேர்ந்து தான் டெல்லியின் காற்றை இவ்வளவு அபாயகரமானதாக மாற்றுகின்றன.

இதற்கு விவசாயிகளை மட்டும் குற்றம் சாட்டுவது ஏற்புடையதல்ல என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சாடியுள்ளனர்.

காற்று மாசின் அடிப்படைக் காரணங்களை ஆராயாமல் அதை சரி செய்வதற்கான நிரந்தரத் தீர்வினைப் பற்றி யோசிக்காமல் விவசாயிகள் மீதும் மக்களின் மீதும் பழி போடுவதுதோ தற்காலிக நடவடிக்கைகளை மேற்கொள்வதோ எந்த வகையிலும் பயனளிக்காது என்பதனை அரசாங்கங்கள் புரிந்துகொள்ள வேண்டும். காற்று மாசைக் குறைக்க வேண்டுமென்றால் வாகனப் பெருக்கத்தையும் அனல் மின் நிலையங்கலையும் தான் முதலில் கட்டுப்படுத்த வேண்டும்.

இது 37 அனல் மின் நிலைய அலகுகளை வைத்திருக்கும் டெல்லிக்கு மட்டுமல்ல இது தனது 500கிமீ சுற்றுவட்டாரத்தில் 33 அனல் மின்நிலைய அளகுகளை வைத்திருக்கும் சென்னைக்கும் பொருந்தும். மும்பை டெல்லி பெங்களூருவை விட அனல் மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் காற்று மாசினால் ஏற்படும் உயிரிழப்புகள் சென்னையில் தான் அதிகமாக உள்ளது என சமீபத்தில் வெளிவந்த C 40 அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

வாகனப் புகை, அனல் மின் நிலைய புகை, தொழிற்சாலைப் புகைகளுடன் பட்டாசுப் புகையையும் சேர்ந்து கடந்த நவம்பர் 04 அன்று சென்னையின் காற்றுத் தரம் 895AQI வரை சென்றது நாம் அறிந்ததே. இந்நிலையில் இந்திய நகரங்களின் காற்றின் தரத்தை உயர்த்துவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள National Clean Air Program இல் மாசடைந்த நகரங்களின் பட்டியலில் சென்னை இன்னும் சேர்க்கப்படாமல் இருக்கிறது.

முறையே திட்டமிடப்படாத அதீத வளர்ச்சியின் காரணமாக சென்னையின் வாகனப் புகையும் தொழிற்சாலைப் புகையும் சென்னையில் காற்றின் தரத்தை டெல்லி அளவுக்கு மோசமடைய செய்து

கொண்டிருக்கும் இச்சூழலில் சென்னை நகரத்தின் காற்றின் தரத்தை உயர்த்துவதற்கென பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்த பிரத்தியேக திட்டத்தினை தமிழக அரசு கொண்டுவர வேண்டும்.

**வாழத் தகுதியற்ற இடமாக மாறிவரும் சென்னை:**

காற்று மாசுபாட்டினால் இந்தியாவில் *2017*ம் ஆண்டு மட்டும் *12.4* லட்சம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள் என்று *"State of Global Air 2019"* ஆய்வறிக்கை கூறுகிறது. குறிப்பாக டெல்லியில் மட்டும் ஆண்டிற்கு *10,500* பேர் காற்று மாசுபாட்டால் இறக்கிறார்கள். மூன்று நிமிடத்திற்கு ஒரு குழந்தை நச்சு காற்றைச் சுவாசிப்பதால் இந்தியாவில் இறக்கிறது என்று *"Global Burden of disease 2017"* அறிக்கை குறிப்பிடுகிறது.

தலைநகர் டெல்லி காற்று மாசு பற்றி இவ்வளவு கவலைப்படும் பொழுது நம் தமிழ்நாட்டில் உள்ள நகரங்களில் காற்றின் தரத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. . குறிப்பாக சென்னை, கடலூர், தூத்துக்குடி , மேட்டூர் போன்ற தொழிற்சாலைகள் மிகுந்த நகரங்களில் காற்றின் மாசு மோசமாகிக் கொண்டே தான் போகிறது.

இந்தியவில் காற்று மாசுபாடு மோசமாக உள்ள நகரங்களை *(122* நகரங்கள்) பட்டியலிட்டு அவற்றில் காற்றின் தரத்தை உயர்த்துவதற்கு *National Clean Air Program (NCAP)* என்ற செயல் திட்டத்தை கடந்த *2019*ம் ஆண்டு மத்திய சுற்றுசூழல் அமைச்சகம் துவங்கியது. ஆனால் அந்த மாசடைந்த *122* நகரங்களின் பட்டியலில் சென்னை சேர்க்கப்படவில்லை.

மாசடைந்த நகரங்களின் பட்டியலில் சென்னை இல்லாதது நல்ல செய்தியா இல்லை கெட்ட செய்தியா?

நல்ல காற்றை சுவாசிக்க முடியாமல் ஏற்கனவே மூச்சு திணறிக்கொண்டிருக்கும் சென்னை வாசிகளுக்கு நிச்சியம் இது ஒரு கெட்ட செய்தி தான்.

**சென்னையின் காற்றின் தரம் எப்படி இருக்கிறது?**

சென்னையின் காற்றின் தரம் மொத்தமாக ஒரு நாள் சராசரி *50AQI* முதல் *100AQI* ஆக இருக்கிறது. இது சுவாசிக்க பாதுகாப்பான அளவு. அதனால் நாம் குறைவாக காற்று மாசு செய்கிறோம் என்று அர்த்தம் இல்லை, டெல்லி, பாட்னா, அகமதாபாத் போன்ற நகரங்களுக்கு இணையான காற்று மாசினை நாமும் தினந்தோறும் வெளியிடுகிறோம்.

இதற்கு ஒரு முக்கிய சான்று கடந்த *2019*ம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட அதிகப்படியான காற்று மாசு. *04.11.2019* முதல் *09.11.2019* ஆகிய நாட்களில் டெல்லிக்கு சமமான காற்று மாசுபாட்டால் சென்னை பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கிறது. *06.11.2019* அன்று டெல்லியின் காற்று மாசு *242AQI* ஆகவும் சென்னையின் காற்றின் தரம் *271 AQI* ஆகவும் பதிவாயிருந்தது*(2). PM2.5* அளவை பொறுத்தவரையில் மணலியில் *334 Microgram/cubic meter,* வேளச்சேரியில் *321 Microgram/Cubic meter,* ஆலந்தூரில் *317Microgram/Cubic meter* எனும் அபாயகரமான அளவு பதிவாகி இருந்தது.

சென்னையில் அப்பொழுது நிலவி இருந்த *Temperature Inversion* னும் வழக்கமாக சென்னையின் காற்று மாசை உள்வாங்கிக்கொள்ளும் கடல் இந்த முறை அதை செய்ய தவறியதும் ஒரு முக்கிய காரணம்.

மிக குறைவான காற்றின் வேகமும் *(1.7Km/Hr)* , கடல் காற்று இல்லாததும், அதிக ஈரப்பதமும் *(95%)*, மேலடுக்கு காற்று ஈரப்பதமாகவும் , தரை மட்ட காற்று சூடாகவும் இருக்கும் *(Temperature Inversion)* நிலையும் நச்சுப் புகையுடன் சேர்ந்து சென்னை காற்றை சுவாசிக்க முடியாத அளவிற்கு மிக மோசமானதாக உருவாகி இருந்தது.

ஆனால் மற்ற நாட்களில் சென்னையின் தட்ப வெப்பத்தின் காரணமாகவும், அருகாமையில் கடல் இருப்பதாலும் காற்று மாசின் கொடூரம் தெரியாமல் தப்பித்துக்கொண்டிருக்கிறோம். இதனால் தான் *NCAP* பட்டியலில் சென்னை விடப்பட்டுள்ளது.

மேலோட்டமாகப் பார்த்தால் சென்னையின் காற்றின் தரம் நன்றாக உள்ளது போல் தோன்றும். ஆனால் வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என்று பிரித்து ஆராய்ந்தால் சென்னையின் காற்றின் தரம் பகுதிக்கு பகுதி மாறுபடுவது புரியும். காற்று மாசில் உள்ள சல்பர் டை ஆக்சைட், நைட்ரஜென் ஆக்சைட், கார்பன் மோனாக்சைடு , *PM2.5* நுண்துகள்கள் போன்றவற்றை தனித்தனியே ஆராய்ந்தால் அது அப்பகுதியில் உள்ள தொழிற்சாலை நடவடிக்கைகள், வாகன நெரிசல் போன்றவற்றை பொறுத்து பகுதிக்கு பகுதி மாறுபடும். வட சென்னையில் உள்ள அனல் மின் நிலையங்கள் மற்றும் காற்று மாசுப்படுத்தும் தொழிற்சாலைகள் காரணமாக அங்கு சல்பர் டை ஆக்சைட், நைட்ரஜென் ஆக்சைட்களின் அளவுகள் தென் சென்னையைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக இருக்கும். அதே போல், போக்குவரத்து நெரிசலாக இருக்கும். காலை மற்றும் மாலை வேலைகளில் காற்று மாசு அதிகமாக காணப்படும்.

சென்னை காற்று மாசை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும் என்றால் காற்றுமாசு காரணிகள், நேரம் காலம் , தென் சென்னை வட சென்னை என பிரித்து பிரித்துப்பார்த்தால் மட்டுமே உண்மை நிலவரம் புலப்படும்.இதையே தான் காற்று மாசு தொடர்பாக சம்பிபத்தில் வெளிவந்த மூன்று முக்கிய ஆய்வறிக்கைகள் *(CPCB's Report On Impact Of Lockdown On Ambient Air Quality, Greenpeace Report Behind the Smokescreen, Health Energy*

| Cities | Delhi | Mumbai | Kolkata | Bengaluru | Chennai |
|---|---|---|---|---|---|
| NO2 Levels in Phase 1 | 51% | 56% | 67% | 67% | 18% |
| NO2 Levels in Phase 2 | 47% | 69% | 74% | 57% | 30% |

*Initiative Study on Chennai Air Pollution)* நமக்கு உணர்த்துகின்றன.

**மத்திய மாசுக்கட்டுபாட்டு வாரிய ஆய்வறிக்கை, *CPCB's Report On Impact Of Lockdown On Ambient Air Quality:***

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய ஆய்வில், பொது முடக்கத்திற்கு முன்பு (மார்ச் 2020) உள்ள காற்றின் தரத்தையும் ஏப்ரல்-மே 2020 பொது முடக்கத்தின் பொழுது சென்னை உட்பட நாடு முழுவதிலும் உள்ள 12 நகரங்களின் இருந்த காற்றின் தரத்தை ஆராய்ந்தது. இந்த ஆய்வின் முடிவில் 2019ம் அதே மாதம் இருந்ததை விட பொது முடகத்தின் பொழுது (ஏப்ரல் மே 2020) காற்றில் நுண்துகள்களின் அளவு 42% குறைந்திருந்தது எனவும் நைட்ரஜென் டைஆக்சைடின் அளவு 30% வரை உயர்துள்ளதாகவும் தெரிவிக்கபட்டிருந்தது.

| City | Phase | SO2 | NO2 | PM 2.5 |
| --- | --- | --- | --- | --- |
| Chennai | Phase-1 Lockdown | 19% ↓ | 18% ↑ | 8% ↓ |
| | Phase-2 Lockdown | 28% ↓ | 30% ↑ | 42% ↓ |

பொது முடக்கத்தின் பொழுது வாகன நெரிசல் குறைந்ததின் காரணமாக சல்பர் டைஆக்சைட் முந்தைய ஆண்டு அளவுகளை விட 28% குறைந்து காணப்பட்டது ஆனால் நைட்ரஜென் டைஆக்சைடின் அளவு 30% அதிகரிக்க காரணம் மத்திய மாசு கட்டுபாட்டு வாரியம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட இடம் வட சென்னையில் உள்ள மணலி, எண்ணூர் பகுதியில் உள்ள அனல் மின்நிலையங்களும் தீவிர காற்று மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளும் பொது முடக்கத்தின் பொழுதும் இயங்கி வந்தது.

அதே போல மத்திய மாசு கட்டுபாட்டு வாரியம் நடத்திய மற்றுமொரு ஆய்வில் 2020 பிப்ரவரி 22 – மார்ச் 21, மார்ச் 22 – ஏப்ரல் 21, 2020 ஆகிய காலகட்டத்தை ஒப்பிடுகையில் பொது முடக்கத்தின் பொழுது சென்னையில் கார்பன் மோனாக்சைடு அளவுகள் 43% குறைந்திருந்ததாகவும் ஆனால் பொது முடக்கத்திற்கு முந்தைய பிப்ரவரி மாதத்தை ஒப்பிடும் பொழுது நைட்ரஜென் டைஆக்சைடின் அளவுகளில் எந்த ஒரு பெரிய மாற்றமும் இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

ஒரே பொது முடக்கத்தின் பொழுது சென்னை காற்றில் கார்பன் மோனாக்சைடு கணிசமாக குறைகிறது ஆனால் நைட்ரஜென் டைஆக்சைடு குறைய வில்லை. கார்பன் மோனாக்சைடு மாசுக்கு வாகனப் புகை முக்கிய காரணமாக உள்ளது, நைட்ரஜென் டைஆக்சைடு மாசுக்கு அனல் மின் நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகள் காரணமாக உள்ளன. ஆகையால் சென்னை காற்றின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றால் நாம் ஒவ்வொரு காற்று மாசு காரணியையும் தனி தனியே அணுக வேண்டியது அவசியமாகிறது.


*Phase I Lockdown: 25th March – 19th April 2020 ,*

*Phase 2 Lockdown: 20th April – 3rd May 2020*

பொது முடக்கத்தின் பொழுது டெல்லி, மும்பை, கொல்கட்டா, பெங்களுரு போன்ற நகரங்களில் எல்லாம் நைட்ரஜென் டைஆக்சைடின் அளவு குறைந்திருந்த போதும். சென்னையில் நைட்ரஜென் டைஆக்சைடு அதிகரித்து காணப்பட்டது. இதையே தான் சமீபத்தில் வெளிவந்த கிரீன்பீஸ் ஆய்வறிக்கையும் உறுதிசெய்கிறது.

**கிரீன் பீஸ் ஆய்வறிக்கை- *Behind the Smokescreen, Greenpeace Report on NO2 pollution in Indian cities:***

கிரீன்பீஸ் என்ற பன்னாட்டு சூழலியல் அமைப்பு நடத்திய ஆய்வில் ஏப்ரல் 2020 மற்றும் ஏப்ரல் 2021 ஆகிய இரண்டு பொதுமுடக்க காலகட்டத்திலும் காற்றில் நைட்ரஜென் டைஆக்சைடின் அளவை ஒப்பிட்டு முடிவுகளை வெளியிட்டது. அதில் சென்னையில் கடந்த ஆண்டு 2020 ஏப்ரலை விட 2021 ஏப்ரலில் நைட்ரஜென் டைஆக்சைடின் அளவு 55% அதிகரித்துள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த ஆய்வை கிரீன்பீஸ் மத்திய சென்னையில் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 2020 பொது முடக்கத்தை காட்டிலும் 2021 ஏப்ரல் பொதுமுடக்கதின் பொழுது மத்திய சென்னையில் வாகன பயன்பாடு அதிகரித்ததும், வட சென்னையில் காற்று மாசு குறிப்பாக அனல் மின்நிலைய நச்சுபுகை 25கிமீ வரை பாதிப்பு உண்டாக்கும் என்பதும் அதுவே 55% நைட்ரஜென் டைஆக்சைட் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருக்க கூடும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். நைட்ரஜென் டைஆக்சைடு வாயு ஆஸ்த்மா , முச்சுக் குழாய் பிரச்சனைகளை மேலும் அதிகரிப்பதோடு பல்வேறு நுரையீரல் சார்ந்த நோய்களுக்கு காரணமாக அமைகிறது. இது மட்டுமல்லாமல் காற்று மாசில் பெரும் பங்கு வகிக்க கூடிய நுண் துகள் உருவாக்கத்திருக்கும் ஒரு வகை காரணமாக உள்ளது.




**Maps:** $NO_2$ column amount in April 2020 and 2021 in the Chennai area. The circle has a 10km radius around the city centre.

எந்த எந்தப் பகுதியில் எந்த எந்த காற்று மாசு காரணிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன, அவற்றை உற்பத்தியில் இருந்து *(Controlling from the source)* குறைக்க என்ன செய்ய வேண்டும் என்ற *Demographic Approach* இங்கு தேவை படுகிறது. இந்த அடிப்படையில் தான் நாம் வட சென்னையையும் , தென் சென்னையையும் பிரித்து ஆராய்ந்து பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. அப்படி பிரித்துப் பார்க்கையில் தென் சென்னையை விட வட சென்னையில் காற்றின் தரம் பல மடங்கு மோசமாகவும் அப்பகுதியை வாழத் தகுதியற்ற இடமாகவும் மாற்றிக்கொண்டிருப்பதும், வடசென்னை தென்சென்னைக்கு இடையே உள்ள சூழலியல்

பாகுபாடும் புரிந்துக்கொள்ள முடியும். இதே கருத்தை தான் *Health Energy Initiative* அமைப்பின் ஆய்வறிக்கையும் ஆதராத்துடன் விளக்குகிறது.

### ஹெல்த் எனெர்ஜி இனிசியேட்டிவ் ஆய்வறிக்கை Health Energy Initiative's, Unfit to Breathe:

கடந்த ஜூலை *2021 Health Energy Initiative* என்ற அமைப்பு சென்னையில் உள்ள *20* இடங்களில் காற்றின் தரத்தை ஆய்வு செய்தது. இதில் பெரும்பான்மையான இடங்களில் காற்றில் நுண் துகள்களின் அளவு பாதுகாப்பான அளவாக வரையறை செய்யப்பட்டுள்ள *60µg/m3* அளவைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. குறிப்பாக திருவொற்றியூர், காசிமேடு(துறைமுகம்), துரைப்பாக்கம்(குப்பைக்கிடங்கு), குருவிமேடு(வல்லூர் அனல் மின் நிலையம்), சோழிங்கநல்லூர்(*OMR* சாலை), வேளச்சேரி, நொச்சிக்குப்பம், கொடுங்கையூர்(குப்பை கிடங்கு), மீஞ்சூர், ஊரணம்மேடு, சேப்பாக்கம்(வடசென்னை அனல் மின் நிலையம்), ஸ்ரீபெரும்புதூர், தி.நகர், அத்திப்பட்டு, காட்டுக்குப்பம், அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் *PM2.5* நுண் துகள்களின் அளவு *60µg/m3* முதல் *128µg/m3* வரை இருந்தது. *PM2.5* நுண் துகள்களை மனிதர்கள் தொடர்ச்சியாக சுவாசிக்க நேர்ந்தால் நுரையீரல் பிரச்சனை முதல் இருதய பிரச்சனை வரை வரும். மிக முக்கியமாக குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் கர்ப்பிணி பெண்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் தன்மை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிபிட்டுள்ள மூன்று ஆய்வறிக்கைகளை வைத்து பார்க்கையில் சென்னையின் காற்றின் தரம் மோசமாகவும் சுவாசிக்க ஆபத்தானதாகவும் உள்ளது. இந்த சூழல் மேலும் தொடர்ந்தால் தொழில்மயமாதல், மக்கள் தொகை பெருக்கம், பெருகும் மாசு இதனுடன் காலநிலை மாற்றமும் சேர்ந்து சென்னையை வாழத் தகுதியற்ற இடமாகவே மாற்றி விடும்.

### சென்னை காற்று மாசை குறைக்க தமிழ்நாடு அரசு செய்ய வேண்டிய நடவடிக்கைகள்:



1. வருடத்தில் *130* நாட்களுக்கு மேல் காற்றின் தரம் மோசமான நிலையில் உள்ள சென்னை நகரத்தையும் *NCAP- National Clean Air Program* இணைக்க வேண்டும்.
2. எண்ணூர்-மணலி தொழிற்பேட்டையில் மேலும் தொழிற்சாலைகளை புதிதாக அமைக்கவோ , விரிவாக்கம் செய்யவோ தடை விதிக்க வேண்டும்.
3. வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை என பகுதி வாரியாக காற்று மாசு ஆராய்ந்து ஒவ்வொரு பகுதியிலும் எந்த எந்த காற்று மாசு கருணிகள் அதிகமாக உள்ளன அதற்கு காரணம் என்ன என்பதை கண்டறிய வேண்டும்.
4. அரசு நகர திட்டமிடுதலின் பொழுது காலநிலை மாற்றம், அப்பகுதியின் தட்பவெட்பம், புவியியல், மக்கள் தொகை , போக்குவரத்து, அதனால் உண்டாகும் மாசு ஆகியவற்றை கணக்கில் கொண்டு சென்னை மற்றும்



அதன் துணை நகரங்களை விரிவாக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

5. காற்று மாசினை உருவாக்கத்தில்(*Reduction from source*) இருந்தே குறைப்பதற்கான திட்டமிடல் வேண்டும்.
6. காற்று மாசை கண்காணிப்பதற்கும் அதை குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு *budjet* இல் அதிக நிதியும் ஒதுக்க வேண்டும்.
7. காற்று மாசை கண்காணிக்கும் தொடர் கண்காணிப்பு நிலையங்களின் (*Continuous Monitoring Stations*) எண்ணிக்கையினை அதிகரிக்க வேண்டும். சமிபத்திய சென்னை காற்று மாசின் மூலம் சென்னையின் *38* பகுதிகள் காற்றின் தரம் பாதிப்புக்குள்ளாகும் *vulnerable points* பகுதிகளாக அடையாளம் காணப் பட்டிருக்கின்றன, *38* இடங்களிலும் தொடர் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப் பட வேண்டும்.
8. அதிக அளவிலான *Sulphur Dioxide, Nitrogen Dioxide* முதலிய நச்சு வாயுகளையும், காற்றை மாசுபடுத்தும் *PM2.5* துகள்கள் மற்றும் *Fly Ash* சாம்பல்களை வெளியிடும் வட சென்னை அனல் மின்நிலையம், வல்லூர் அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையத்தையும் விரைவில் மூடுவதற்கான முயற்சிகளையும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தியில் இருந்து தமிழ்நாட்டின் மின்சார தேவையை பூர்த்தி செய்வதை நோக்கிய முன்னெடுப்புகளை எடுக்க வேண்டும்.
9. சென்னை மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் காற்று மாசுப்படுத்தும் தொழிற்சாலைகளை கண்டறிந்து அதனை குறைக்கும் நடவடிக்கைகளை தமிழ்நாட்டு மாசுக் கட்டுபாட்டு வாரியம் எடுக்க வேண்டும். சென்னையில் புதிதாக எந்த காற்று மாசுப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் அனுமதி வழங்கப்படாது என்று அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.
10. சென்னை தனிநபர் வாகன பயன்பாட்டினை குறைக்க பொது போக்குவரத்தை மேலும் மேம்படுத்த வேண்டும். சென்னை மெட்ரோ ரயில் கட்டணக் குறைப்பு, நவீன சாலைகள், முக்கிய வழித்தடங்களில் அதிக அரசு பேருந்துகளை இயக்குவது போன்ற வாகனப் புகை குறைக்கும் வழிமுறைகளை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.
11. காற்று மாசுப்பாட்டினால் உடல் நலத்திற்கு ஏற்படும் தீமைகளையும், அதில் இருந்து மக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்கான வழிமுறைகளையும். பிரச்சாரங்கள், பொது நிகழ்சிகள், தொலைக்காட்சி, ரேடியோ, சமூக வலைத்தளங்கள் போன்றவற்றை பயன்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
12. சென்னை நகரத்தில் ஆங்காங்கே மேலும் புதிதாக பசுமை பூங்காக்களையும், பசுமை தோட்டங்களையும் உருவாக்க வேண்டும்.

# தொல்காப்பியம் அறிவோம்

***01. எழுத்ததிகாரம்***

***01. நூன் மரபு***

## எழுத்துக்களின் வகை

**எழுத்தெனப் படுப**

**அகரமுதல் ன கர இறுவாய்**

**முப்பஃ தென்ப**

**சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே.**

எழுத்தென்று சிறப்பித்துக் கூற பெறுவன சார்ந்து வருதலை தமக்கு தன்மையாக உடைய மூன்று எழுத்துக்களும் இல்லாதவிடத்து "அ" கரம் முதல்"ன" கரம் இறுதியாக விளங்கும் முப்பஃதுமாம் என்பர் *(அச் சார்பெழுத்துக்கள் மூன்றும் சேர்ந்த வழி| எழுத்துக்கள் முப்பத்து மூன்றாம்)*

## சார்பெழுத்துக்கள்

**அவைதாம்**

**குற்றியலிகரம் குற்றியலுகரம்**

**ஆய்தம் என்ற**

**முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன**

சார்ந்து வரும் என்று மேலே சொல்லப் பெற்ற குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும் மூன்று வகை உள்ளிட்ட எழுத்துக்களும் மேற்கூறப்பட்ட முப்பது எழுத்துக்களோடும் ஒரு தன்மையாய் வழங்கும்.



# திருக்குறள் பயில்வோம்

அறத்துப்பால்

**அதிகாரம்/ 001:** கடவுள் வாழ்த்து

**விளக்கம்:** மு.வரதராசன்

*குறள் 1:*

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

*குறள் 2:*

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்.

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளை தொழாமல் இருப்பாரானால், அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?.



*குறள் 3:*

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்.

அன்பரின் அகமாகிய மலரில் வீற்றிருக்கும் கடவுளின் சிறந்த திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர், இன்ப உலகில் நிலைத்து வாழ்வார்.

*குறள் 4:*

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல.

விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

*குறள் 5:*

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.'

கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

*குறள் 6:*

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறி வாயிலாகப் பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர், நிலை பெற்ற நல்வாழ்க்கை வாழ்வர்.

*குறள் 7:*

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

குறள் 8:

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்

பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்ற கடல்களைக் கடக்க முடியாது.



குறள் 9:

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை.


கேட்காதசெவி, பார்க்காத கண் போன்ற எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

குறள் 10:

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்.

இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.



படம்: கு. லோகேஸ்வர்

8 - C நாடார் சரஸ்வதி மேல்நிலைப் பள்ளி,

உசிலம்பட்டி

# வளர்பிறை

(தொடர்கதை)

- இரத்தினவேல் பாண்டியன்

## 01 தமிழர் திருநாள்

தைத்திங்கள் முதல் நாள், தமிழர் திருநாள். என் சிறு வயது முதல் நகரத்தில் வளர்ந்ததால், பொங்கல் எப்போதும் எரிவாயுப் பொங்கலே. இந்தப் பொங்கலும், என் மனைவி, மகளோடு சென்னையில், இனிமையாகப் பொங்கியது. நமக்கான விழா என்று தமிழர் திருநாளான பொங்கலுக்கு எப்போதுமே ஒரு தனிச் சிறப்பு உண்டு. இந்த வருடமும், வேட்டி சட்டை சகிதம், என் இரண்டு வயது மகளுக்குப் பட்டுப் பாவாடை, சட்டை போட்டு அழகு பார்த்தோம்.

நான் பாண்டியன், சொந்த ஊர் மதுரை. சென்னை வந்து சில வருடங்கள் ஆயிற்று. ஆனால், யாரிடம் பேசினாலும், சில நிமிடங்களில், எதிரில் உள்ளவர்கள், "நீங்க மதுரையா" என்று கேட்டு விடும் அளவிற்கு மண் மனம் விட்டுப்போகாத பலரில் நானும் ஒருவன்.




கரும்பும் பொங்கலும் தித்திக்க இனிதான பொங்கல் திருநாள் காலைப்பொழுது கடந்து சென்றது.

இந்த விழா வேறெந்த விழாக்களையும்விட மனதின் ஆழத்தில் இனம்புரியாத பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்றதே.... எதனால் அப்படி?

வரலாற்று ரீதியாகவும் பொங்கல் விழா சங்ககாலம் தொட்டு வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டு வருகிறதே அதனாலா? இருக்கலாம். இது நம் மரபில் வேரோடிய பண்பாடு. நம்மிடம் இருக்கும் ஆவணங்கள் படி, நாம் தற்காலத்தில் கொண்டாடுவது போல், குறைந்தபட்சம் சோழர் காலத்தில் கொண்டாடப்பட்ட சான்றுகள் உள்ளன.

தமிழ் இனம் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த, வாழும் இனம் என்பதற்குப் பல சான்றுகள் இருந்தாலும், பொங்கல் பண்டிகை அவைகளில் முதல் இடம் பிடிக்கும். ஆம், பொங்கல் பண்டிகை, இயற்கைக்கு, அதுவும், ஆதவனுக்கு நன்றி சொல்லும் விழா. கதிர் அறுவடை செய்து, கதிரவனுக்கு நன்றி சொல்லி, மக்கள் ஒன்று கூடிக் கொண்டாடும் விழா. பொங்கலுக்கான மற்றொரு சிறப்பு, நான்கு நாள்கள் மக்கள் கொண்டாடித் தீர்ப்பதுதான். பழையன கழிதல், புதியன புகுதல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் போகித் திருநாள், மார்கழியின் கடைசி நாளன்று கொண்டாடப்படுகிறது. தைத்திங்கள் முதல் நாள், தைப் பொங்கலாகவும் , மறுநாள் மாட்டுப்பொங்கல், உழவுக்கு உதவும் கால்நடைகளை போற்றும் நாளாகவும், அதற்கு அடுத்த நாள் காணும் பொங்கல், மக்கள் விளையாடிமகிழவும், ஒன்று கூடவும் கொண்டாடப்படுகிறது.

பொங்கலின் மற்றொரு சிறப்பு என்னவெனில், எந்தச் சமயக் கோட்பாடும் இன்றி, கலாச்சார படையெடுப்புகளில் கூட எந்த மதமும் தனக்கென ஆட்கொள்ள முடியாதபடி தமிழர்களுக்கான பண்டிகையாகத் தைத்திருநாள் இன்று வரை கொண்டாடப்படுவதே ஆகும். பெரும்பாலும் வயல்களிலும், வீடுகளிலும் பொங்கல் வைத்து, இயற்கைக்குப் படைத்து, மகிழ்வாகக் கொண்டாடும் மக்கள், அனைத்துச் சமய வழிபாட்டுத் தளங்களிலும் அதே போல் ஒன்றுகூடி கொண்டாடும் வரை, எந்த ஒரு தனிச் சமயமும் இதை ஆக்கிரமித்துக் கொள்ள முடியாது .

சிறுவயதில், நெல்லையில் வசிக்கும் அப்பாவின் நெருங்கிய நண்பர், பரமசிவன் மாமாவின் வீட்டிற்குச் செல்வதுண்டு. அங்கே பெரியவர்கள் பொங்கல் வைத்து முடித்த பின்பு, சிறுபிள்ளைகள் சேர்ந்து, சேலையில் வீடு மாதிரி ஒரு அமைப்பை ஏற்படுத்தி, பொங்கல் செய்து விளையாடுவோம். இதைப் பற்றி நான் கேட்டபோது பரமு மாமா "இதுக்குப் பேரு சிறுவீட்டு பொங்கல் ல.

நாங்க உங்கள மாதிரி இருக்கைல கொண்டாடினோம். இப்போ நீங்க கொண்டாடுறீங்க". என்றார். அவரின் பழைய ஞாபகங்கள் அசைபோட சிறுவீட்டுப் பொங்கல் பற்றி மேலும் விவரித்தார்.

மார்கழி மாதம் முழுதும் விடியற்காலையில், வீட்டில் உள்ள பெண் பிள்ளைகள் வாசல் தெளித்து, கோலமிட்டு, மாட்டுச் சாணத்தில் உருண்டை பிடித்து அதில் பூ சொருகி கோலத்தின் நடுவே வைப்பார்கள். செம்பருத்தி, பூசணி, பீர்க்கு அல்லது எக்காளம் பூக்களையே பொதுவாக வைப்பார்கள். காலையில் வைக்கும் பூக்கள், வெயிலில் மாலைக்குள் விரிந்து, சாணத்தோடு சேர்ந்து விடும். அதை எருவட்டாக சுவரில் தட்டி விடுவார்கள்.



இந்தப் பூ வைத்து கோலமிட்ட வீடுகளில், தை பூசத்திற்குள் ஒரு நாள், சிறுமிகள் மற்ற சிறார்களுடன் சேர்ந்து பொங்கல் வைத்து கொண்டாடுவார்கள். பொங்கல் வைக்க அந்த வீட்டினுள் அல்லது முற்றத்தில் ஒரு சிறிய வீடு காட்டுவார்கள். அதிகபட்சம் அந்த வீடு ஐந்தடிக்கு ஐந்தடி என்ற அளவில் இருக்கும். தைப்பொங்கல், வழக்கமாகத் தலைவாசலில் வைத்தாலும், இந்தப் பொங்கல், சிறுவீட்டின் முன்னால் நடக்கும். இந்த நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக, அந்தப் பெண் பிள்ளைகள், பொங்கலையும், பூக்களாலான எருத்தட்டுகளையும் நீர்நிலைகளுக்கு எடுத்துச் சென்று நீரில் விடுவர். சங்க இலக்கியத்தில் இருக்கும் குறிப்புகள் படி, இதைத் "தை நீராடல்", என்று ஒரு பெரும் விழாவாக கொண்டாடி இருக்கிறார்கள்.

இது தைத்திங்கள் முதல் நாளோ அல்லது தைத் திங்கள், மதி நிறைந்த நாளான, தைப்பூசம் அன்றோ நிறைவாகும் விழாவாக உள்ளது.
தைந் நீராடல் என்பது, இளம் பெண்கள் மார்கழி மாதம் முழுவதும் பால் ஆகாரங்கள் ஏதும் உண்ணாமல், தலைமுடியில் எண்ணெய் வைக்காமல் விரதம் இருந்து, அனைவரும் நீர்நிலைகளில் நீராடுவதே ஆகும். இது குறித்து இலக்கிய குறிப்புகள் உள்ளன. பரிபாடலில் வரும் "தாயருகே நின்று தவத் தைந்நீராடுதல் நீயறிதி வையை நதி" என்பது இதற்கு மிகப்பெரிய சான்று.

பரமு மாமா சொன்னதை, கதை கேட்கும் சிறுவனாய், ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது பக்கத்துத் தெருவில் ஒரு பாடல் ஒலித்தது. "சங்கமம்" திரைப்படத்திலிருந்து, "மார்கழித் திங்கள் அல்லவா.."

பரமு மாமா தமிழில் மிகவும் ஆர்வமுள்ளவர், அந்தப் பாடலைக் கேட்டு ஒரு புன்முறுவலோடு என்னைப் பார்த்தார். "இந்தப் பாட்டு எந்த இலக்கியம் என்று தெரியுமா?", என்றார். "சங்கமம் படம் மாமா", என்றேன். சிரித்துவிட்டு, 'இது ஆண்டாள் திருப்பாவை டா' என்றார். ஒன்றும் விளங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

பரமு மாமாவின் அந்தச் சிரிப்பைப் பல வருடங்கள் கடந்து புரிந்துகொண்டேன். ஆண்டாளின் திருப்பாவை, மார்கழி நோன்பு, தொடங்கிய நாள், "மார்கழித் திங்கள், மதி நிறைந்த நன்னாள்", என்கிறது. அதாவது, நோன்பின் முதல் நாள், மார்கழியில் வரும் முழுநிலவு நாள் ஆகும். அப்படிப் பார்க்கையில், முப்பது நாள் கழித்துத் தைத் திங்கள் மதி நிறைந்த நாளில் நோன்பு முடிந்திருக்க வேண்டும். தைத் திங்கள் முழுநிலவு நாள்தான் தைப்பூசம் என்று நாமறிவோம். இந்தப் பாசுரத்தில் வரும், "பாற்சோறு மூட நெய்பெய்து" என்பது பொங்கல் போல் உணவைச் செய்து சுவைக்கிறார்கள் என்ற குறிப்பு ஆகும்.

பரமு மாமா குறிப்பிட்ட சிறுவீட்டுப் பொங்கலும், ஆண்டாளின் மார்கழி நோன்பும் ஒரே சடங்கு போல் தோன்றியது. சங்க இலக்கிய சிறுவீட்டுப் பொங்கல் வழக்கமே, ஆண்டாள் காலத்தில் இப்படி மருவி இருக்குமோ என்று தோன்றியது.

*(இன்னும் வளரும்)*



# திருமூலரியல் - 1

(தமிழாய்வு)

**முனைவர் திருமூலர் முருகன்**

சமய உலகில் விதந்து பேசப்படுபவர்களுள் திருமூலர் முதன்மையான இடத்தை வகிக்கிறார். "நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்", என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்டவர். பக்தி இலக்கிய மரபில் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்துமூன்று நாயன்மார்களுள் திருமூலர் ஒருவர். திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் ஆகிய மூன்று நூல்களும் தமிழ் அறிவுலகில் மதிப்புறு இடத்தை வகிக்கின்றன. திருமூலர் படைத்த திருமந்திரம்,சாத்திரம், தோத்திரம் மற்றும் வாழ்வியலை ஒருங்கே கொண்ட முழுமைபெற்ற நூலாகத் திகழ்கிறது.

நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியில் திருமூலரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கைலாயத்திலிருந்து வந்த சிவயோகியார் மூலன் என்னும் இடையன் உடலில் புகுந்து அப்பெயர் பெற்றார் எனத்தெரிகின்றது - திருத்தொண்டர் புராணம், திருமூலநாயனார் புராணம், பாடல்கள் 1,13,14 பக்கம். 60) திருமூலர் வரலாற்றைக் கூறும் பெரியபுராணத்திலும் திருமூலரின் இயற்பெயர் கூறப்படவில்லை. தற்சிறப்புப் பாயிரத்தைச் சான்றாகக் கொண்டு திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதன் என்று லெ.ப.கரு.இராமநாதன் கருதுகிறார்.(திருமந்திர மாநாட்டு மலர்-8, பக்.2,3) திருமந்திரத்தில் சுமார் நாற்பத்தெட்டு இடங்களில் மூலன், மூலம் ஆகிய சொற்கள் காணப்படுவனவற்றைச் சான்றாகக் கொண்டு, 'மூலன்' என்ற பெயர் நிலைப்பெற்றதாகக் கூறலாம். (இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, பக். 59,60)


திருமூலர் பிறந்த இடம் குறித்துப் பல்வேறு முரண்பட்ட கருத்துகள் உள்ளன. தமிழகத்தின் வடக்கினின்று திருமூலர் வந்தார் எனத் திருத்தொண்டர் தொகை கூறுகிறது, எனினும் திருவாவடுதுறை வருவதன்முன் அவரது நிலையென்ன என்பது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டியுள்ளது. கைலாய வழியைச் சேர்ந்தவர் என்ற குறிப்பும் தென்படுகிறது. இது குறித்து இரா.மாணிக்கவாசகம், "கயிலையினின்று வந்தவர் என்பதைக் காட்டிலும் கயிலை மரபில் வந்தவர் என்று கொள்வதே பொருத்தமாகும். எனினும் வடக்கினின்று வந்தவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் வட இந்தியாவையே பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதற்குச் சான்றுகள் இல்லை."(மேற்சுட்டிய நூல், ப.68)

திருமூலர் பிறப்பினால் தமிழர் என்று பி. கோவிந்தன், தமிழர் சமயம்(ப.118) என்ற நூலில் குறிப்பிடுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறாகப் பல கருத்துகள் நிலவினாலும், திருவாவடுதுறையை யோகத்திற்கு இடமாகத் திருமூலர் தேர்ந்து கொண்டார் என்பதில் ஐயமில்லை.

திருமூலர் பெயர்க் காரணம், வாழ்க்கை வரலாறு போலவே இவருடைய காலம் குறித்தும் பல்வேறு கருத்துகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. கே.ஆர். சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், பாலூர் கண்ணப்ப முதலியார், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, வெள்ளைவாரணர், சி.வி.நாராயணசாமி ஐயர், சதாசிவ பண்டாரத்தார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் போன்ற அறிஞர்கள் திருமூலரின் காலம் குறித்து ஆய்வு செய்துள்ளனர். கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் திருமூலரின் காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். கால ஆராய்ச்சி தொடர்ந்து செய்யப்பட வேண்டும். திருமூலர் யார், அவருடைய காலம் என்ன என்பது ஒரு பக்கம் இருப்பினும் நம்முடைய நோக்கம், அவருடைய படைப்பில் இடம்பெற்றுள்ள கருத்துகளை முன் வைப்பதாகும்.

சைவத்திருமுறைப் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாகத் திருமூலரின் திருமந்திரம் இடம்பெற்றுள்ளது. இந்நூல் தோத்திர நூலாகவும் சாத்திர நூலாகவும் மட்டுமின்றி வாழ்வியல் நூலாகவும் திகழ்கிறது. தமிழில் மிக நேர்த்தியாகப் படைக்கப்பட்ட ஞானநூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடப்பட்டனவாகவும் கூறப்படுகிறது. திருமந்திரம் அதிகம் பேசப்படாத காலகட்டத்தில் திருவாவடுதுறை ஆதினத்தில் 1957- ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி, தொடர்ந்து திருமந்திர மாநாடுகள் நடத்தப்பட்டு மாநாட்டு மலர்கள் வெளியிடப்பட்டன. திருமந்திரப்

பேரறிஞர்களை ஒன்றிணைத்து திருமந்திர மாநாடுகள் நடத்தப்பட்டன. க. வச்சிரவேல் முதலியார், ச. தண்டபாணி தேசிகர், வே. இராமநாதன் செட்டியார், ஈசான சிவாசாரியார், தேவசேனாபதி, கி.வா.ஜ, டி.எம்.பி. மகாதேவன், ஆறுமுகநாவலர், ஜி. சுப்பிரமணியப்பிள்ளை, இராசமாணிக்கனார், லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார், ஆர். விசுவநாத ஐயர், ச. சிவகுமார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, மீ.பா. சோமு, அ.ச.ஞானசம்பந்தன் உள்ளிட்ட அறிஞர்களைக் கொண்டு திருவாவடுதுறையில் திருமந்திர மாநாடுகள் நடத்தப்பட்டன.



திருமந்திரத்திற்குப் பல உரைகள் எழுதப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமான உரைகள், திருவாவடுதுறை மடம் வெளியிட்ட பஞ்சாக்ஷர தீபம் என்னும் உரை, பழனியப்பா பிரதர்ஸின் ஜி. வரதராஜன் உரை, சுப. அண்ணாமலை உரை ஆகிய உரைகள் குறிப்பிடத்தக்கன. திருமந்திரச் சுவடிகளை ஒப்புநோக்கி, இடைச்செருகல்களாக இணைக்கப்பட்டப் பாடல்களை எடுத்துக்காட்டிய டாக்டர் சுப. அண்ணாமலையின் 'திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு'(இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனம், 84, கலாஷேத்ரா சாலை, திருவான்மியூர், சென்னை-600 041) குறிப்பிடத்தக்க நூலாகும்.

திருமந்திரத்திம் மூன்றாம் தந்திரத்தில் இடம்பெற்றுள்ள அட்டாங்க யோகம், பிராணாயாமம், பரியங்க யோகம் குறித்த கருத்துகள் அறிவியல் அணுகுமுறையை கொண்டன என்பதை, உலக அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். (மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சில கற்களில் யோகம் செய்வது போன்று உருவச்சிலைகள் காணப்பட்டதாகிய குறிப்புகளும் கிடைத்திருக்கின்றன. (கோ.டான்யா, ஆன்மிகமும் மார்க்ஸிசமும், ப.147) திருமந்திரத்தில் 'பரியங்க யோகம்' குறித்த பகுதியை, மிக நுட்பமாக ஆய்ந்து பார்ப்பதன் வாயிலாக திருமூலருக்கு யோக மரபில் தனித்த இடம் இருப்பதை உறுதிப்படுத்தலாம்.

திருமூலர் காலத்தைக்கடந்து நிலைத்து நிற்பதற்குப் பல சான்றுகளைக் கூறலாம். அவற்றுள் காலத்தை வென்றவர்கள் குறித்து ஜெயகாந்தன் கூறிய கருத்து இங்கு பொருத்தமாக இருக்கும்,

" எவ்வளவு தான் காலமும் விதியும் ஒரு மனிதனை நிர்ப்பந்தப்படுத்தி, அழுகிப்போன ஒரு சமூகத்தின் நடுவே வாழ வைத்தாலும் தனி மனிதர்கள் தங்கள் அறிவின் தெளிவாலும், தாங்கள் சித்த உறுதியுடன் கடைப்பிடித்து ஒழுகிவரும் ஸம்ஸ்காரங்களினாலும் தங்களைச் சுற்றி ஆத்ம ரீதியான ஒரு வேலி அமைத்துக்கொண்டு அந்தத் தனித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இன்னும் சொல்லப்போனால் அதுவே, அவ்விதம் வாழவேண்டிய நிர்ப்பந்தமே சமூகத்துக்கும் சரி, தனிமனிதனுக்கும் சரி அவசியமாகிறது. ஏனெனில் ஒரு சிறந்த மனிதன் தன்னைச்சுற்றித் தானே அமைத்துக்கொள்ளும் அந்த வேலிக்குள் வளர்ந்து செழிக்கும் அவனது தனித்துவம் தான் பிற்காலத்தில் சமூகத்தையே ஆள்கிறது. சமூகத்தின் அழுகலிலிருந்து காப்பாற்றப்படும் அந்த நெறியே பிறகு சமூகத்தின் சொத்தாகிறது. இப்படி ஒரு சமூத்திலிருந்து தானே பிரிந்து, ஒரு குறிப்பிட்ட நிலையில் அத்துடன் தானும் சங்கமமாகி, சமூகத்தைத் தன்வயப்படுத்தும் தனிமனிதர்கள் தான் ஞானிகள், மேதைகள், மகாபுருஷர்கள். தனிமனிதனும், மஹாபுருஷர்களும் சமூக இயக்கத்தின் விளைவுதான் என்று பின்னால் சமூகம் பெருமைப்படப் போவது சரியே என்றாலும் அந்த அளவு பெருமை அந்தத் தனிமனிதர்க்கும் உண்டு".(ஜெயகாந்தன்,ஜெயகாந்தன் குறுநாவல்கள், ப.190)

ஞானம்,உலக மேன்மைக்குப் பயன்பட வேண்டும் என்ற பார்வையின் ஊடாக ஒன்றிணைந்து பயணிப்போம்.

*(தொடரும்...)*

# மாணவர் பக்கம்

## கவிதை

### என்னவாகனும்னு ஆசை

அப்பன் குடிகாரன்
கதியற்ற தாயோ மண்ணுக்குள் போய்விட்டாள்
விதியற்று அடுப்பங்கரையில் பிறந்த என்னை
என் சக்களத்தி மவளே
உசுரு வாங்கவே
பொறந்து தொலைச்சியோ
என என்னிடம் நொந்துகொள்ளாமல்
மடியேந்திய மறுதாயே

சித்தி என
உறவுகள் சொன்னாலும்
அம்மா என்று
முதன்முதலாய் உச்சரித்ததை
ஊரெல்லாம் சொல்லிக் கலங்கியவளே

கதிர் வருமுன்னே
வெந்நீர் போட்டு
காலின் மேல் என்னைக் கிடத்தி
தலை அழுத்தி மூக்கு நிமிர்த்தி
கருப்பா இருந்தாலும்
கலையா இருக்குன்னு
கண்ணேறு கழிச்சவளே

பெத்துகிறது பெருமையா
பன்னிகூடத்தான் பத்து குட்டி போடுது
ஆளாக்கறவதா ஆத்தா
என்று ஆறுதல்பட்ட என் ஆதாரமே



நாலு வார்த்த சேர்த்து
பேசத்தெரியாவிட்டாலும்
கல்லூரி வரை
வழிகாட்டியவளே

கடவுளே தூங்கினாலும்
நான் பார்க்க
கண்ணயராத மவராசியே

என்னவா ஆவனும்னு ஆசை என்கிறார்கள்
ஏழேழு ஜென்மத்துக்கும்
உன் மகளாகும் ஆசை என்கிறேன் நான்


**ஜெ.ஜமுனா**
இளங்கலை, தமிழ்த் துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரும்பாக்கம்.


## ஓவியங்கள்



**பி.ஹம்ஷ ஸ்ரீ வர்ணன்**

6ம் வகுப்பு கேரன் மெட்ரிக் பள்ளி உசிலம்பட்டி.




**பி. ஹம்ச குரு லியோனார்டு.**

5ம் வகுப்பு . கேரன் மெட்ரிக் பள்ளி உசிலம்பட்டி.


# கோலசுரபி

(தொழில்நுட்பம்)


**- நீச்சல்காரன் இராஜராமன்**

கோலம் என்பது கணிதமும், கலையுணர்வும் கலந்த தமிழர்களின் கலை ஆகும். தமிழர்களின் எண்ணற்ற கலாச்சாரங்களுள் முக்கியமானது, அதிகாலையில் எழுந்து வாசலில் கோலமிடுவதாகும். மார்கழி என்றாலே ஆன்மீகப் பயணங்களும் வழிபாடுகளும் நிறைந்த மாதத்தில் கோலமும் முக்கியத்துவம் பெறுகிறது. சங்கப் பாடலான நற்றிணையில் "வரி" என்றும் அகநானூற்றில் "கோல்" என்றும் பரிபாடலில் "அழகு/ஒப்பனை" என்றும் பல்வேறு குறிப்புகள் கோலத்தைப் பற்றி உள்ளன. கோலப்பொடி, அரிசிமாவு, சாணம், வண்ணப்பொடி, பூக்கள் போன்றவை கோலங்கள் வரையப் பயன்படும் பொருட்கள்.

நட்சத்திரம், விளக்கு, தாமரை, ரோஜா, அன்னம், கிளி, மயில் போன்றவை கோலங்களில் அதிகமாக இடம் பெறும் வடிவங்களாகும்.




வரிவடிவக் கோலங்கள் பெரும்பாலும் நான்கு அல்லது இரு புறமும் ஒரே ஒழுங்கில் சதுரம், வட்டம்,




அறுகோணம் அல்லது எண்கோணம் வடிவில் இருக்கும். சிக்கு, நெளி, கம்பி, புள்ளி போன்றவை அதன் அங்கங்களாகும். ஒருமுறை வந்த வழியே கோடுகள் மீண்டும் வரக்கூடாது. எங்குமே கூரிய முனையில் வளையக் கூடாது. அனைத்துப் புள்ளிகளையும் கோடுகள் கடந்திருக்க வேண்டும் இவை கோலத்தின் விதிகள். ஆந்திராவில் முகுலு, மேற்கு வங்காளத்தில் ஆல்பனா என்றும், சத்தீஸ்கரில் சௌக்புராணா என்றும் இதர பகுதிகளில் ரங்கோலி, ரங்கவல்லி என்றும் இது அழைக்கப்படுகிறது.

கோலம் என்பது சுண்ணாம்புப் பொடியில் வரையும் வடிவம் மட்டுமல்ல. அதனுள் கணித நுட்பமான வடிவியலும், சேர்வியலும் உள்ளன. அதைச் சரியாகக் கணித்து, கணிதப் பண்புகளாகக் கணினிக்குக் கொடுத்தால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்குக் கோலங்களை உருவாக்கலாம். அத்தகைய முயற்சியாக கோலசுரபி என்ற இணையச் செயலி புதுப் பொலிவுடன் மார்கழி மாதத்தில் தற்போது அறிமுகமாகியுள்ளது.

இணையவழிக் கச்சேரிகள், திருவிழா நேரலைகள் என்று ஒவ்வொன்றாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் இந்தக் காலகட்டத்தில் கோலத்தை

நவீனப்படுத்த இது உதவுகிறது. செயலியை அதற்கான http://apps.neechalkaran.com/kolasurabhi முகவரியில் பயன்படுத்தலாம். கைப்பேசி அல்லது கணினி வழியாக



எளிதாக அணுகி, கோலங்களை வரைந்து சேமித்துக் கொள்ளமுடியும். நேர்ப்புள்ளி, ஊடு புள்ளிக் கோலங்கள், நட்சத்திரக் கோலங்கள், கம்பிக் கோலங்கள் போன்ற சிக்கலான கோலங்கள் அனைத்தையும் நொடியில் வரைந்து கொடுக்கிறது.



இதில் தான் தோன்றித்தனமாகப் பல கோலங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கலாம். ஒவ்வொருமுறை உருவான கோலம் நழுவு படங்களாக


திரையில் இருப்பதால் ஒப்பிட்டும் பார்க்கலாம். யாருடைய உதவியுமின்றி

விரும்பிய புள்ளிகளில், விரும்பிய நிறத்தில் புதுப்புதுக் கோலங்களை இதில் உருவாக்கிக் கொள்ளலாம்.

சில கோலங்கள் யாருமே வரையாத கடினமான முடிச்சுகளுடனும், அழகான வளைவுகளுடனும் வரும். கோலப்போட்டிகளுக்குத் தயாராகும் முன்னர் இதில் உலாவினால் நிச்சயம் வெற்றிக்கான கோலம் கிடைக்கும்.

நமது அழைப்பிதழ்கள், பதாகைகள் போன்றவற்றில் அழகூட்ட இந்த வடிவங்கள் மிகவும் பொருத்தமாக இருக்கும்.மேலும், குழந்தைகளும் கைப்பேசி அல்லது கணினியில் பார்த்து வரைந்து பழகலாம்; இக்கோலங்களை

அச்சிட்டு, குழந்தைகளுக்குத் தந்தால் சிறந்த பொழுது போக்காகவும் கற்பனைத் திறனை அதிகரிக்கவும் உதவும். அதற்காகவே குழந்தைகள் பழக எளிய செயல்முறைப் பயிற்சிக்கான ஒரு http://apps.neechalkaran.com/assets/practice_book.pdf மின்னூலும் இதனுடன் உள்ளது. இந்த நூலினை அச்சிட்டுக் கோலங்களுக்கு வண்ணம் தீட்டலாம், நிறைவடையாத கோலங்களை வரைந்து காட்டலாம். கோலப் பயிற்சிக்கான புத்தகங்கள் பெரிதாக இல்லை என்பதால்




இதனைக் குழந்தைகளுக்குத் தந்து முயன்றும் பார்க்கலாம்.

வாசலில் கோலங்கள் இடுவதென்பது ஒரு கலையே. ஓவியம் போன்று தனியொரு கலையாக இல்லாமல் கோலம் அன்றாட வாழ்வில் கலந்தவொன்றாகிவிட்டது. கோலங்களைச் சிறுவயதில் நன்கு வரையும் குழந்தைகள் கணிதத்தில் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள்.

இராமானுஜரும் தனது தாயின் கோலங்களைப் பார்த்தே கணித வல்லுநராக உயர்ந்திருக்கலாம்.

கோலங்கள் கணிதத் திறனின் வெளிப்பாடு மட்டுமல்லாமல் கற்பனையின் வெளிப்பாடும் என்பதால் அக்கலையை அடுத்த தலைமுறையினரிடமும் கடத்த வேண்டும். நவீனமயமாகாத கலைகள் வழக்கிழந்து போகக்கூடும். அவ்வகையில் கோலப் புத்தகங்களின் நவீன வடிவமாக கோலசுரபி உதவும். கோலத்தைக் கடக்கும் போதெல்லாம் ரசிப்போம் கோலக்கலையை நவீனத்துடன் வளர்ப்போம்.

## சொலவடை

**சிறுமலை  சுத்துற சின்னம்மாவுக்கு மணவறை சுத்த மயக்கமாம்**

**அர்த்தம்:** வேலை பார்க்க நொண்டி சாக்கு சொல்வது

**ஆத்துல போற தண்ணிய அய்யாக்குடி ஆத்தாக்குடிங்கிறனான்**

**அர்த்தம்**: இயற்கையாக அல்லது தானாக நடக்கும் விஷயங்களை தான் செய்தது போல் சொல்வது

# நிறைவாழ்வு பெற

(சித்தவைத்தயம்)

**சித்த மருத்துவர் அருண் B.S.M.S.,**

உலகின் மூத்த குடி தமிழ்க்குடி என்பது பன்னெடுங்காலமாக நாம் கூறிக் கொண்டிருப்பினும் நம்மில் பலருக்கும் நாம் மூத்த குடிதானா என்ற ஐயம் உள்ளது. இச் சூழலில் கீழடி,ஆதிச்சநல்லூர், பொருந்தல் ஆகிய இடங்களில் நடந்து வரும் அகழ்வாய்வுகள் அந்த ஐயத்தைப் போக்கும் வகையில், நாம் மூத்தகுடிதான் என்று பறை சாற்றும் காலம் வெகுதொலைவில் இல்லை. அகழ்வாய்வு ஒருபுறம் நடந்த காலத்திலும், மொழியை ஆய்வு செய்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள்



**தமிழ்தான் உலகின் மூத்த மொழி;**

**தமிழன்தான் உலகின் மூத்த மாந்தன்;**

**தமிழ் மருத்துவம்தான் உலகின் முதன்மையான மருத்துவம்**

என்று நிறுவி பல வருடங்கள் கடந்துவிட்டன.

உலகில் தமிழ் நாகரிகம் தோன்றிய காலத்தில் பல நாகரிகங்கள் தோன்றி இருப்பதாகக் கருதினாலும் உலக மாந்தர்கள் காட்டு வாழ்க்கை வாழ்ந்த காலத்தில் நாம் நகர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தோம்! பல கலைகளிலும் ஏற்றம் பெற்றிருந்தோம். கலைகளில் ஈடுபட நல்ல உடல் நலமும்,மனநலமும் இன்றியமையாதது அல்லவா! ஆம் நமது முன்னோர்கள் மருத்துவ அறிவோடு, அவர் பின்பற்றிய வாழ்க்கைமுறை அதற்கு உதவியது என்பதை எவரும் மறுக்க இயலாது. அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மருத்துவத்தின் இன்றைய நிலை என்ன?

கடந்த பத்து ஆண்டுகளாக நம்மைச் சுற்றி வரும் தொற்றுநோய்கள் காரணமாக தமிழ் மருத்துவம் குறித்த விழிப்புணர்வு ஓரளவு ஏற்பட்டிருந்தாலும் தமிழ் மருத்துவத்தின் வீச்சு முழுமையாக மக்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றே கூறலாம்.

ஆம், நண்பர்களே. கடந்த அறுபது, எழுபது வருடங்களில் நாம் இழந்த மருத்துவ அறிவு அளவிடமுடியாதது. நமது உடலைப் பற்றிய புரிதலையும்,சூழலைப் பற்றிய அறிவையும் முற்றிலும் இழந்து நிற்கிறோம். தமிழ் மருத்துவம் என்றால் நிலவேம்புக் குடிநீர், கபசுரக் குடிநீர், இன்னும் சில மூலிகைப் பொடிகள் என்று நாம் நமது மரபு அறிவை சுருக்கிக் கொண்டுவிட்டோம். அந்தக்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் இருந்த மருத்துவ வழிமுறை இன்று தொலைந்து, தொலைக்காட்சி,சமூக வலைதளங்களில் உயர்வு நவிற்சி அணியில் பகிரப்படும் சொல்லப்படும் செய்திகளையே நமது மருத்துவம் என்று வேறு வழி தெரியாமல் நம்பி அதனைப் பின்பற்றி உடல் நலத்தைக் கெடுத்துக் கொண்டிருப்பவர் ஏராளம். இவற்றிற்கெல்லாம் விடை கிட்டும் வகையில், தமிழ் மருத்துவம் குறித்த பல கூறுகளையும் விளக்கும் வண்ணம் இத்தொடர் அமையும் என்று நம்புகிறேன்.

அதென்ன தமிழ் மருத்துவம்? சித்த மருத்துவம் என்று சொல்லவேண்டியதுதானே என்ற ஐயம் எழுகிறது அல்லவா? சித்த மருத்துவம் தமிழ் மருத்துவம் இரண்டும் ஒன்றுதான்! சித்தர்கள் காலத்திற்கு முன்பும் தமிழ்க்குடியில் மருத்துவம் இருந்தது. சித்தர்கள் தமிழ் மருத்துவத்தை அடுத்த தளத்திற்கு எடுத்துச் சென்றனர். சித்தர்களின் பங்களிப்பிற்குப் பின்னர் அவர்களைப் பெருமைப்படுத்தும் நோக்கில் சித்த மருத்துவம் என்றே அடையாளப் படுத்தப்படுகிறது. தமிழ் மருத்துவம் என்று மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்லக் காரணமும் உண்டு!

பல அறிவுத் திருட்டுக்களுக்கு உள்ளானவை நமது தொல் அறிவு! பல கலைகளையும் திருடி தாம்தான் மூலம் என்று பெருமை பேசும் கூட்டம் நமது மருத்துவத்தையும் விட்டு வைப்பார்களா என்ன? சித்தர்களின் காலத்தை இலக்கியங்களின் மூலம் கணக்கிட்டு நமது மருத்துவத்தை காலத்தால் பின்தள்ள எக்காலமும் ஒரு கூட்டம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவற்றை நாம் புறந்தள்ளவும் தொன்மையான மருத்துவம் நம்முடையது என்று வலியுறுத்திச் சொல்வதற்கும் தமிழ் மருத்துவம் என்ற பதம் நமக்கு உதவுகிறது!

**தொடர்ந்து பயணிப்போம் நிறைவாழ்வு நோக்கி!**

# ஊருண் கேணி

**(சங்கப் பாடல்வழிப் பெரும்பயணம் – தொடர்: 1)**

**- கவிஞர் இரா. பச்சியப்பன்**

சொல்லச் சொல்ல தீராத அழகுடையன சங்கப் பாடல்கள். வாழ்வின் அனைத்துக் கணங்களும் கவிதையாகவும் கவிதையின் அனைத்து அசைகளும் வாழ்வாகவும் நிரம்பிய சங்க காலத்தை நாம் ஏன் மீண்டும் மீண்டும் பேசுகிறோம்?

என்றேனும் ஒரு பொழுதில் எங்கேனும் ஓரிடத்தில் அந்த உன்னத அலை எழும்பி நம் கரையிலும் தொட்டு நம்மில் மோதிச் சிரிக்காதா என்கிற பேராசையில்தான் தொடர்ந்து படிக்கிறோம்; எழுதுகிறோம்.

நீங்கள் நடந்து வந்த பாதையின் ஓரம், உங்களுக்கே தெரியாமல் ஒரு பூ மலர்ந்திருப்பது போல, இந்தப் பாடல்கள் தரும் அனுபவத்தை நீங்களும் கடந்திருக்கக்கூடும். அதை நினைவு படுத்தி, உங்களோடு உங்களை உரையாட வைப்பதே இத்தொடரின் நோக்கம்.

இது கவிதை நெடும்பயணம்; வாருங்கள் பேசிக் கொண்டே செல்லலாம்.



வரலாறு என்று நமக்குச் சொல்லித் தருவனவெல்லாம் பெரும்பாலும் என்னவாக இருக்கிறது? மன்னர்களின் படையெடுப்புகள்; ஆட்சி மாற்றம்; வீரதீரச் செயல்கள்; வாரித் தந்த பெருமை; சமயம் வளர்த்தல்; கோயில்; கோட்டை போன்றவைகளால் நிரம்பின பக்கங்களைப் படித்துத் திரட்டிய அறிவைத்தான் வரலாற்று அறிவு என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குடபுலவியனார் எனும் கவிஞன், ஒரு மன்னனைப் பார்த்து, அந்த வரலாற்றில் இடம் பெறுவது எல்லாம் சராசரி மன்னர்கள் செய்கிற வேலை; இப்படிப்பட்ட வரலாற்றைக் கொண்டவர்கள் கடற்கரை மணலினும் பலராவர்; இது எல்லாம் ஒரு பெருமையே இல்லை என்கிறான்.

இத்தனைக்கும் அந்த மன்னன் சாதாரணமானவன் அல்ல. தலையாலங்கானத்துப் போரில் சேரசோழரோடு அய்வரையும் இளவயதிலேயே களம் கண்டு வாகைசூடிய தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான்.

படை நடத்திய புலமெல்லாம் வெற்றி ஒன்றையே பார்த்துப் பழகிய அரசனிடம், போர்க்களம் ஒன்றே புகழ் விளையுமிடம் என்று நம்பிக்கொண்டிருந்த பாண்டியனிடம், போரில் வருவதுதான் நிலைத்த செல்வம் என்று நம்பிக் கொண்டிருந்த அந்தத் தென்னவனிடம் இது எல்லாம் புகழே இல்லை என்று முகத்துக்கு நேரே சொல்லிவிட்டு, ஊரறிய, பாடலாகவும் பாடிச்சென்றிருக்கிறான்.

என்றால், மன்னர்களுக்கு நிலைத்த புகழை எவைதாம் தரும். மன்னர்களுக்கும் சராசரி மனிதர்களுக்கும் எழும் ஆசைகள் என்பனவற்றைத் திரட்டிப் பார்த்தால் இந்த மூன்று வகைக்குள் பெரும்பாலும் அடக்கிவிடலாம். இறந்த பிறகு சொர்க்கம் வாய்க்க வேண்டும்; இருக்கும் போது எல்லாவற்றையும் ஆளும் அதிகாரம் தனதாக வேண்டும்; காலத்திற்கும் பெயர் நிலைக்கிற மாதிரி எதையேனும் சாதிக்க வேண்டும்...

இந்த ஆசைகளை முன்னிறுத்தியே உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறது. மன்னர்களும் தலைவர்களும் உருவாகி உருவாகி மடிகிறார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களெனக் கருதி, கோட்டை கொத்தளங்களைச் சுற்றிவரும் நாம், என்றாவது ஊர் செல்லும் வழியெங்கும்

நிரம்பி அலையாடும் ஏரிக்கரையில் நின்று, அதன் வரலாற்றைப் பேசியிருக்கிறோமா?

ஏரிகளுக்கு வரலாறு இல்லையா? இருக்கிறது; அது பல்லுயிர் வரலாற்றைத் தண்ணீரால் பேசிக்கொண்டிருக்கிறது.



ஏரிக்கரை என்பது கோட்டைச் சுவரை காட்டிலும் அழகுடையது உயிர்ப்புடையது. நிலைபேறு கொண்டது. கோட்டைகள் சிதைந்து இருந்த தடம்கூட இல்லாமல் அழிந்துபோயிருக்கலாம். மன்னர்கள் காலம் முடிந்து நவீன கால வரலாறு நடைபோடலாம். ஏரிகள் பண்பாடு முடிந்துபோய்விடுமா என்ன. இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் ஏரிகளுக்கு மதகு அமைத்து நீர்ப்பாய்ச்சும் பாசணமுறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறான். பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பாண்டியர் காலத்திலும் தமிழ்நாட்டில் பெருமளவு ஏரிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் சற்றேரக்குறைய நாற்பதாயிரம் ஏரிகள் உள்ளன. நதிக்கரை நாகரீகம் போன்று பேசப்படவேண்டியது ஏரிப் பண்பாடு. நமக்கு அவை இன்றும் சொல்லியபடி கம்பீரமாய் நிற்கின்றன.

ஏரிக்கரை என்பது, நீரின் வரம் வேண்டித் தனியனாய் தவமிருக்கும் மண்ணால் பேருரு கொண்ட ஒரு துறவி.

ஏரி நிரம்பினால் விருந்தாளிகள் நிரம்பிய வீடு போல அது மாறி விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். மலையில் இருந்து நீரைக் கொண்டு வரும் கால்வாய், தலைவன் வினை முடித்துத் திரும்பும் தடம் போல மிகக் கரடுமுரடானது. மதகுகளிலிருந்து கிளம்பும் கால்வாய் தாய்மை நிரம்பிய நெகழ்ச்சி உடையது. எங்கோ மேய்ந்து தாகமாற்ற வரும் எருமைகள், உச்சி வெயிலுக்கு இதமாக நீரழுந்தித் தலையை மட்டும் வெளிக்காட்டிக் கிடப்பது, தாயின் முந்தானைக்குள் இருந்து எட்டிப்பார்க்கும் குழந்தையை நினைவுபடுத்த வில்லையா? தண்ணீரில் இக்கரை மூழ்கி அக்கரை எட்டிப்பார்க்கும் உள்ளாங்குருவிகள் சிறார்களோடு போட்டியிவதை அறிந்ததில்லையா?

பூப்படைந்த பெண்ணின் ரத்தக்கரை படிந்த துணியை அலசுவது முதல், காலத்தில் கலந்தவருக்காகச் சடங்கு முடித்துத் தலை முழுகுதல் வரை எத்தனையோ ஆயிரம் வாழ்க்கையை ஏரி பார்த்துக் கொண்டே இருக்கிறது. மனிதனை மட்டுமல்ல, பல்லாயிரம் உயிர்களை வாழ வைக்கும் ஏரியை உருவாக்குவதே நிலைத்த புகழைத் தரும் என்கிறார் குடபுலவியனார்.

உயிர்களின் உடம்பு என்பது தான் என்ன? அது உணவின் பிண்டமாகும். உணவு என்பது தான் என்ன? நிலத்தோடு நீர் புணர்ந்து உருவான உயிர் ஆதாரம் ஆகும். உடலில் உயிர் நிலைத்திருக்கச் செய்யவேண்டுமெனில் நிலத்தில் நீர் நிலைக்கச்செய்யவேண்டும்.

நீர் தங்காத, வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் நிலத்தை எல்லையற்ற பரப்பில் வைத்துக் கொண்டிருந்தாலும் யாருக்கு என்ன புண்ணியம்? நிலத்தில் நீரை நிறுத்துகிற வழி செய்கிறவனே இந்த உடம்பில் உயிரை நிறுத்தி வாழவைக்கும் வழி செய்தவன் ஆகிறான் என்கிறார். இங்கிருந்துதான் மானுட குலத்தின் மாபெரும் தத்துவம் பிறக்கிறது. உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்,

உணவை யாரள்ளித்தருவார்? நீர்நிலைகள் நம்பியிருக்கும் நிலம் தான் தரவேண்டும். நிலத்திற்கு எந்நாளும் நீரளிக்கும் ஏரிகளை உருவாக்குபவனே எல்லாவற்றுக்கும் உயிர்கொடுக்கக் காரணமாயிருக்கும் அந்த புண்ணியவான் ஆவான்.

இந்த மாபெரும் அறத்தைச் செய்ய வலியுறுத்திய குடபுலவியனார் போன்றோரால்தாம் தமிழகத்தில் இத்தனை ஏரியில் உருவாகியிருக்கிறது. ஓரிரு மாதங்களில் பொழியும் மழையை ஆண்டு முழுவதும் சேமித்து வைத்து முந்தானை அவிழ்த்துத்தரும் மூத்தோள் தான் ஏரி.

அந்த ஏரியை எங்கு அமைக்க வேண்டும் என்பதையும் கூறுகிறார். நிலம் நெளியும் இடத்தில் ஏரி இருக்க வேண்டும் என்கிறார். நிலம் நெளிந்த இடம் எனில் என்ன? அதைப் புரிந்து கொள்ள ஏதேனும் ஒரு ஏரியை நேரில் போய் பார்த்தால்தான் ஆழ்பொருள் விளங்கும். எட்டாம் நாள் பிறையைப் போன்றது ஏரிக்கரை என்கிறது இன்னொரு பாட்டு. இதற்கும் ஏரிக்கரையை நேரில் போய் பார்ப்பதுதான் சரி. நீர்நிலைகளில் இருந்து பிரியும் கால்வாய் மல்லாத்திப்போட்ட தென்னை ஓலை போல இருக்கிறது என்று சீவக சிந்தாமணி கூறுகிறது. அதற்கும் ஏரிக் கரையில் நின்றபடி வயலில் பிரிகின்ற அந்தக் கால்வாயை பார்த்தால் தான் அதன் பொருள் புரியும்.

சரி இந்த சங்கப் பாடலை முழுவதும் படிப்போம்

மழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
பரந்து பட்ட வியன் ஞாலம்
தாளின தந்து, தம்புகழ் நிறீஇ:
ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்!
ஒன்றுபத்து அடுக்கிய கோடிகடை இரீஇய
பெருமைத்து ஆக நின் ஆயுள் தானே!
நீர்த் தாழ்ந்த குறுங் காஞ்சிப்
பூக் கதூஉம் இன வாளை,
நுண் ஆரல், பரு வரால்,
குரூஉக் கெடிற்ற, குண்டு அகழி;
வான் உட்கும் வடிநீண் மதில்;
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்இசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள், இனி, மிகுதியாள!
நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே;
வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்புற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்குஉத வாதே; அதனால்,
அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண்தட் டோரே;
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே.
(புறநானூறு-18)

(விளக்கம்: அகன்ற உலகத்தைத் வென்று, தம்முடைய புகழை உலகத்தில் நிலைநிறுத்தித் தாமே ஆட்சி செய்த வலியவர்களின் வழித்தோன்றலே!

வேந்தனே! நீ மரணத்திற்குப் பிறகு செல்ல இருக்கும் உலகத்தில் அனுபவிப்பதற்கேற்ற செல்வத்தை விரும்பினாலும், உலகத்தை காக்கும் மற்ற அரசர்களின் வலிமையை அழித்து நீ ஒருவனே தலைவனாக விரும்பினாலும்,

சிறந்த புகழை நிலைநாட்ட விரும்பினாலும், அதற்குரிய தகுதியை நான் கூறுகிறேன்; நீ அதைக் கேட்பாயாக! நீரில்லாமல் வாழ முடியாத இவ்வுடலுக்கு உணவு கொடுத்தவர்கள்தான் உயிர் கொடுத்தவர் ஆவர். உணவாலாகிய இவ்வுடலுக்கு உணவுதான் முதன்மையானது. ஆகவே, உணவு என்று சொல்லப்படுவது நிலத்தோடு கூடிய நீர். அந்நீரையும் நிலத்தையும் ஒன்று சேர்த்து உணவுப் பொருள்களை விளைவித்தவர்கள்தான் உயிரையும் உடலையும் வாழவைப்பவர் ஆவர். விதைகளை விதைத்துவிட்டு மழையை எதிர்பார்த்திருக்கும் புன்செய் நிலம் அகன்ற பரப்புடையதாக இருந்தாலும் அதனால் மன்னனுக்கு ஒருபயனுமில்லை. வளைந்து செல்லும் ஆழமான இடங்களில் விரைந்து நீர்நிலைகளை உருவாக்கியவர்கள்தான் இவ்வுலகில் தாம் விரும்பியவற்றைத் தடுத்து நிறுத்தி வைத்துக்கொண்டவராவர். அவ்வாறு செய்யாதவர்கள், இவ்வுலகில் தாம் விரும்பியவற்றை நிலை நிறுத்திக் கொள்ளாதவராவர்.) ஏரியை உருவாக்குபவனுக்கு மறுமை வாழ்வும் நீங்காப்புகழும் குன்றாசெல்வமும் சேரும் என்கிறது சங்ககாலம். ஏரியை அழிக்கிறவன் பணமும் புகழும் அதிகாரமும் அடைவான் என்கிறது நவீனகாலம். பயன்பாட்டில் உள்ள ஏரிகள்போக பெருநகரங்களின் அருகில் உள்ளவை கழிவுநீர்க்குட்டைகளாகவும் குப்பைகொட்டும் பள்ளங்களாகவும் மாறுவது கொடுமையானது.

அறம் மேலோங்கிய சங்ககால பாட்டைகள் மறைந்து நான்கு வழிச்சாலைகள் உருவான இந்த பென்னம் பெரிய பூமியில் குடிநீர் லாரிகளும் கழிவுநீர் லாரிகளும் விரைந்து கொண்டிருக்கின்றன.

உயிரைக் காப்பாற்ற இடையே புகுந்து விரைந்து கொண்டிருக்கிறது நம் பிழைப்பு.

***(இன்னும் நீர்வரும்)***

# தமிழர் மெய்யியல்

ம. பிரதீப்

மெய் + இயல் ,= மெய்யியல். மெய் பற்றிய இயல். நான் யார் என்ற கேள்விக்கான விடை, தமிழர் மெய்யியலில் புதைந்து கிடக்கிறது. தமிழ் இலக்கியங்களில் மெய்யியல் கூற்றுகள், நம் கண்முன்னே படர்ந்து கிடக்கிறது. அனைத்து கலை மற்றும் பண்பாட்டு அம்சங்களிலும் அது வெளிப்படுகிறது. நம் நடுகல் வழிபாடும், இன்றும் சோடைபோகாமல் இருக்கும் நாட்டார் தெய்வங்களும், நம் தமிழர்களின் வாழ்வியலின் கூறுகளை வாழவைத்துக்கொண்டுள்ளன.

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*

*மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள்_423)*

வள்ளுவன் கூற்றுபோல் யார் எது சொன்னாலும் மெய்யறிதல் சிறப்பு.

நம் வாழ்வில் இருவகையான உண்மைகள் உள்ளன. நிலைத்த உண்மை முதல் வகை. இவ்வகை உண்மைகள், நேரம் காலம், சூழல், எதுவாயினும் எல்லோருக்கும் பொதுவான உண்மையாக இருக்கும். எந்த சூழ்நிலையிலும் பொய்க்காது. இதற்கு உதாரணமாக, ஆதவன் வெளிச்சம் தருகிறான், என்றால் இது நிதர்சனமான உண்மை. யாராலும் இதை பொய் என்று கூறவோ மாறுபடவோ முடியாது. நெருப்பு சுடும்; உயிரினங்கள் பிறக்கும், இறந்துபோகும்; காற்றை , தண்ணீரை கைகளால் பிடிக்க முடியாது போன்றவை எல்லாம் நிதர்சனமான உண்மைகள்.

இரண்டாவது உண்மை ஒப்பீட்டளவினால் ஆன உண்மை. இவ்வகை உண்மைகள், காலம் , நேரம், இடம் , மனிதர்களுக்கு ஏற்ற மாதிரி மாறும். ஒருவன் பொருளாதார ரீதியில் பின்தங்கியன் என்றால், அவன் பிச்சைக்காரன் என்று வகைப்படுத்த முடியாது. எல்லா ஏழைகளும் பிச்சையெடுப்பதில்லை. ஒருவன் காதல் தோல்வியில் தற்கொலை செய்துகொள்வன் என்பது நிதர்சன உண்மை கிடையாது, அது மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இதுபோல் உண்மை என்ன, அது எவ்வகை உண்மை என்பதை அறிந்து புரிந்து கொள்வது சிறப்பு.



தமிழர் மெய்ஞ்ஞானியாகிய , இராமலிங்க அடிகளார் (வள்ளலார்) அவர்களின் பாடல் சொல்லும் தமிழர்கள் தொடரவேண்டிய மெய்யியலை பற்றி இங்கு பார்க்கலாம் -

**சாதியும் மதமும் சமயமும் பொய்யென**

**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி**

**சாதி மதம் சமயமெனும் சங்கடம் விட்டு...**

**சாத்திரம் சேறாடுகின்ற சஞ்சலம் விட்டு'**

**"கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக''**

**"சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்**

சாத்திரக் குப்பையும் தணந்தேன்’

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை

இருவாய்ப்புப் புன்செயல் எருவாக்கிப் போட்டு

மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம

வழக்கமெல்லாம் குழிக்கொட்டி மண்மூடிப்போக

நால்வருணம் ஆச்சிரம ஆசாரம் முதலாம்

நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே

சாதியைநீள் சமயத்தை மதத்தையெலாம்

விடுவித்தென் றன்னை ஞான

நீதியிலே சுத்த சிவ சன்மார்க்க

நிலைதனிலே நிறுத்தியருளிய’

மதத்திலே சமய வழக்கிலே மாயை

மருட்டியே இருட்டியே மறவாக்கதத்திலே மனத்தை வைத்து

வீண் பொழுது நிலத்திலே போக்கி மயங்கி யேமாந்து நிற்கின்றார்.

மதமெனும் பேய் பிடித்தாட ஆடுகின்றார் தோத்திரஞ்

செய்து ஆங்காங்கே தொழுகின்றார்.’

சாதிசமயங்களிலே விதிபல வகுத்த

சாத்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்று’’..



என்றுரைக்கிறார். மனிதர் உருவாக்கிய மடமைக்கருத்தில் இருந்து விடுவித்து ’ ஞானநீதியிலே சுத்த சிவ சன்மார்க்க நிலைதனிலே நிறுத்தியருளிய’ என்கிறார். இங்கே இயற்கையைன் உண்மைப்பொருளை உணர்தலே ஞானம் என்றாகிறது.

நம்மைச் சுற்றி இருக்கும் இயற்கைக்கு ஒரு நெறி உள்ளது. அதை யாரும் எழுதிவைக்கவில்லை. அதை உணர நம் முன்னோர்கள் சொன்ன, நாட்டுப்புறக் கதைகளிலும் , காப்பியங்களிலும், பாடல்களிலும், சொலவடைகளிலும், இன்றும் உயிர்ப்போடு உள்ளன.

நம் நீண்ட நெடிய வரலாற்றில், நமக்கு புரியும் ஒரு விடயம், இயற்கைக்கு மாறாய் , எதிராய் மனிதன் யாராக இருந்தாலும் , எதை எழுதினாலும், அது சில காலத்தில்,பொய்த்துப்போகும் என்பதுதான்.

**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

# திலீபன் இட்ட விதை

(சிறுவர் சிறுகதை)

**- இராஜசேகர் சிங்காரவேல்**

அலாரச் சத்தம் கேட்கிறது. போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்குகிறான் திலீபன். அம்மா பார்வதியின் குரல் சமையல் அறையில் இருந்து "திலீபா இன்னுமா தூங்குற? தூங்குனது போதும்டா எழுந்து வா " என்று அதட்டலாய்க் கேட்டது. . "இதோ வரேன் மா என்றபடி மெல்ல சோம்பல் முறித்து ,எழுந்து வந்தான் திலீபன்.

"பால் கார அண்ணன் வர சத்தம் கேக்குது. போயி பால் பாக்கெட் வாங்கிட்டு வா. வந்து சீக்கிரம் குளி " என அதட்டினாள் .

'சரிம்மா' என்றபடி வாசல் நோக்கி நகர்ந்தான் திலீபன்

"எங்கே போறீங்க தங்கம்"

என்று கேட்டுகொண்டே வீட்டுக்குள்ளே நுழைகிறார் தாத்தா ராஜமாணிக்கம்.
"அம்மா பால் பாக்கெட் வாங்கிட்டு வரச் சொல்லுச்சு தாத்தா" என்றான் திலீபன் "அதெல்லாம் நன் வாங்கிட்டேன் வா உள்ளே போவோம்" என்றபடி வீட்டுக்குள் நுழைந்தார் ராஜமாணிக்கம் .

"அம்மா தாத்தா என்னவோ வாங்கிட்டு வந்துருக்காங்க வா இங்க வந்து பாரேன் " என உற்சாகமானான் திலீபன் .

"என்ன மாமா அது" என்று கேட்டுகொண்டே சமையலறையில் இருந்து வெளியே வந்தாள் பார்வதி .

"அது ஒண்ணுமில்ல மா நடந்து போயிட்டு இருந்தன். மூர்த்தி வீட்டுக்கிட்ட செடி போட்டு வித்துட்டு இருந்தாங்க. என்ன னு கிட்ட போயி பாத்தன் எல்லாம் நாட்டு செடிங்க மா"

"எலந்த செடியை பார்த்ததும் நம்ம கிராமத்துல இருந்த ஞாபகம் வந்துடுச்சி .

வீரனார் கோவில் கிட்ட இருந்த மரம் எலந்த மரம், அங்கேயே தான் கிடப்போம் ம்ம்ம்ம்ம் அது ஒரு காலம் அதான் ஒன்னு வாங்கியாந்தன்"என்றார் "அட நீங்க வேர மாமா இங்க மழை தண்ணி ஓடவே இடம் இல்ல. இதுல எங்க மரம் வைக்க போறீங்க னு கேட்டாள் " பார்வதி . "அட நம்ம சமையலறை பின்னாடி கொஞ்சம் காலி இடம் இருக்குக்கே அங்க வைக்கலாம் மா" என்று சொல்லி அந்தச் செடியை எடுத்து கொண்டு பின்புறம் நடக்கத் தொடங்கினார் ராஜமாணிக்கம் .

"ஏதாவது பண்ணுங்க" என்று புலம்பிக்கொண்டே சமையலறை நுழைந்தாள் பார்வதி

"வா தாத்தா நாம செடியை வைப்போம். இன்னிக்கே வைப்போமா! . எப்போ காய்க்கும்?, பழம் தருமா? என்ன கலர்ல பழம் இருக்கும்? என்று கேள்விகளை அடுக்கிகொண்டே தாத்தாவோடு சமயலைறைக்குப் பின் உள்ள காலி இடத்துக்கு சென்றான் திலீபன் .

இருவரும் சேர்ந்து ஒரு குழி தோண்டி பின் அதில் தனது கையால் அந்தச் செடியை வைத்தான் திலீபன் . எப்போ தாத்தா பழம் தரும் என்ற கேள்வியை மட்டும் விடவே இல்லை

"நீ தெனமும் இதுக்கு தண்ணீர் ஊத்தி பாத்துக்கிட்டாதான் இது பழம் கொடுக்கும். .நீ பெரியவன் ஆனதும் சாப்பிடலாம்" என்றார் தாத்தா .



தாத்தா சொன்னது போதும். தூங்கும் போதும் அந்தச் செடி பற்றியே நினைவு. தினமும் காலையில் தண்ணீர் ஊற்றுவான்.

பள்ளி முடிந்து வந்ததும் அந்தச்
செடியைத்தான் முதலில் சென்று பார்ப்பான்.
அவனைப்போல் செடி உற்சாகமாக தளிர்க்க
ஆரம்பித்தது. இளம்பச்சை நிரத்தில் மெல்லிய

தளிர்கள் காற்றிலாடின. பள்ளி தோழர்களிடம் சிலாகித்து சொல்வான். இப்படியே நாட்கள் சில காலம் செல்ல

முழு ஆண்டு தேர்வுகள் முடிந்து கோடை விடுமுறை வந்தது .

"மாமா நீங்களும் திலீபனும் ஏன் இந்த லீவுக்கு ஊரில் இருக்குற மூத்த மகன் வீட்டுக்கு போயிட்டு வரக்கூடாது" என்று கேட்டாள் பார்வதி .

"போய் பாத்துட்டு வாங்கப்பா... திலீபனுக்கும் வெளிய போன மாதிரி இருக்கும்" என்று சொன்னார் திலீபன் அப்பா .

"சரிப்பா சரி நாளைக்கே போகலாம்" என்று சொன்னார் தாத்தா .

"நான் வச்ச மரத்த யார் பாத்துக்குவா! நான் வரல நீங்க போயிட்டுவாங்க தாத்தா" என்று மறுத்தான் திலீபன் .

"தாத்தா கூட போ, அங்க உனக்கு அண்ணன் இருக்கான். விளையாட பாப்பா இருக்கா. நிறைய பொம்மை இருக்கும்" என்று சம்மதிக்க வைத்தார் அப்பா . ஒரு வழியாக ஊருக்கு போக ஒத்துக்கொண்டான் திலீபன்.

தாத்தாவும் பேரனும் ஊருக்குச் சென்றனர் . அங்கும் எல்லோரிடமும் தான் மரம் வைத்த கதையைச் சொல்லிகொண்டே இருந்தான் திலீபன் .

ஊர்போய்த்திரும்பும்வரை வழியெங்கும் செடி பற்றிப் பேச்சுதான் .

"இந்நேரம் பூவந்துருக்குமில்ல தாத்தா, காய் இருக்குமா தாத்தா" என க் கேட்டுக்கொண்டேயிருந்தான். வீட்டின் உள்ளே நுழைந்ததும் நேராக தான் வளர்த்த செடியைப் பார்க்க ஓடினான்.

சற்று நேரத்தில்"அம்மா அம்மா" என்று அழும் குரல்.

"என்னாச்சு திலீபா" தாத்தா கேட்டுக்கொண்டே பின்னே சென்றார்.

திலீபனுக்கு ஒரே அழுகை. தேம்பித் தேம்பி அழுகிறான்.

"இங்க பாரு தாத்தா... என் செடியைப் பாருங்க. எப்படி யிருக்கு. இதுக்குதான் நான் ஊருக்கு வரல என்றேன். அப்பா அம்மாவுக்கு பணம் காய்க்கிற மரமிருந்தா போது. வேற ஒன்னும் தேவையில்ல. குப்பய செடிமேலயா போடுவாங்க" என்று அழுதபடி ஓடி வீட்டினுள் குப்புறப் படுத்துக்கொண்டான் .

ஏன் என்னாச்சு என்ற படி ஓடிவந்து பார்த்தவர் ஒரு நிமிடம் திகைத்துப் போனார்.

அங்கே கருகிய நிலையில் செடி. மேலே சில நெகிழிப் பைகள். பால் பை , காய் வாங்கிய நெகிழிப் பை , ஆடைகள் வாங்கிய நெகிழிப் பை என அந்தச் செடிமீது பாதி எரிந்த நிலையில் குவிந்து கிடந்தது. பார்த்தவுடன் கலங்கிப் போனார் தாத்தா .

அந்தக் காலத்தில் நாங்க மஞ்சப்பை தான் எடுத்து போவோம் கடைக்கு. அதனால ஒரு தீங்கும் வந்தது இல்ல. அந்தப் பையை கிண்டலா பேசிப் பேசி இன்னைக்கு இங்க வந்து நிக்குது. .என் தாத்தா எங்க அப்பாக்கு ஒரு காட்டையே கொடுத்துட்டு போனாரு அவுங்க கல்லு மாதிரி தெம்பா திடகாத்திரமா இருந்தாங்க.

.

எங்க அப்பா எங்களுக்கு சில மரத்தை கொடுத்துட்டு போனாரு. நான் இத்தனை வயசுவரைக்கும் தெம்பா இருக்கோம். ஆனா நாகரீக வளர்ச்சிங்குற பேர்ல நீங்க என்னத்த உங்க பிள்ளைங்கட்ட கொடுக்க போறீங்க. ஒரு செடி கூட வாழ தகுதி இல்லாத, வாழ விடாத இந்த எடத்துல நாளைக்கு எப்படி என் பேரன் வாழப்போறான். அவனுக்காக என்னத்த விட்டு வைக்கப் போறோம் என்று கண்ணீர் சித்தியபடி புலம்பி கொண்டே நகர்ந்தார் தாத்தா ராஜமாணிக்கம்.

"நாம் வாழ்ந்துவிட்டால் மட்டும் போதாது நாம் எதிர்காலம் வாழ இந்த இயற்கையையும் கொஞ்சம் வாழவிடுவோம். மரம் நடுவதே மாபெரும் அறம் . இத எப்போதான் புரிஞ்சிக்கப் போறீங்களோ" என்று நகர்ந்தார் தாத்தா.

திலீபன் அப்பா அம்மா மனதில் நட்டவிதை முளைக்க ஆரம்பித்தது



# விருது வாழ்த்து

## எழுத்தாளர் அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது.

தமிழ் நவீன புனைகதை உலகின் ஆகச் சிறந்த படைப்பாளிகளில் ஒருவர் எழுத்தாளர் அம்பை.

சி.எஸ். லட்சுமி எனும் இயற்பெயர் கொண்ட இவர் கோவையில் 1944ஆம் ஆண்டு பிறந்தார். 1960 களில் இருந்து எழுதிவருகிற எழுத்தாளர் அம்பை தற்போது மும்பையில் வசித்து வருகிறார்.

பெண்ணிய எழுத்தை அதன் தீவிரத்தோடு தமிழுக்குத் தருபவர். அந்திமாலை(நாவல்), சிறகுகள் முறியும். வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை, காட்டில் ஒரு மான், சக்கர நாற்காலி, ஸஞ்சாரி, வற்றும் ஏரியின் மீன்கள், பயணப்படாத பாதைகள், சொல்லாத கதைகள், சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை உள்ளிட்ட நூல்களை எழுதியவர்.



பெண்ணியத்தை வாழ்வின் நீரோட்டமான கூறாக எல்லாத்தளங்களிலும் உணர்ந்து முழுமையை நோக்கி மானுடத்தை நகர்த்தும் நவீனத்தைக் கைக்கொண்டவர். தன் எழுத்தை அதன் இயல்பான போக்கில் நடத்திச் செல்பவர். பிம்பங்களை உருவாக்குவதும் பிம்பங்களுக்காக வாழும் அவசியமற்றும் இயங்குபவர். புனைவுகள் மட்டுமல்ல ஆய்வாளராகவும் செயலாற்றி வருகிறார்.

**'சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை' என்ற சிறுகதை நூலுக்காக 2021 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது பெறும் எழுத்தாளர் அம்பை அவர்களுக்கு நற்சித்திரம் இதழ் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**

## பாலபுரஸ்கார் விருது பெறும் கவிஞர் மு. முருகேஷ்

புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணத்தில் பிறந்த கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் கவிதை, இதழ்ப்பணி, கல்வி ஆலோசகர், பதிப்புத்துறை எனப் பல்வேறு



தளங்களில் தனக்கென தனித்தன்மையுடன் இயங்கி வருபவர் ஆவார். விரல் நுனியில் வானம் என்கிற தனது ஹைக்கூ கவிதை நூலின் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமாகி, பலரின் பாராட்டைப் பெற்றவர். இருளில் மறையும் நிழல், நீ முதல் நான் வரை, குழந்தைகள் ஊருக்குப் போய் விட்டன, கழிப்பறைக்கு சென்றிருக்கிறார் கடவுள், தலைகீழாகப் பார்க்கிறது வானம், வரும் போலிருக்கிறது மழை, குழந்தைகள் உலகம்- உள்ளே வெளியே, ஒல்லி மல்லி குண்டு கில்லி, தவிட்டுக் குருவியும் தங்கராசு மாமாவும், நல்லமுத்து பாட்டிக்கு நாவல் மரம் சொன்ன கதை , உயிர்க் குரல், அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை, பூவின் நிழல், என 50க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர்.

திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். மென்மையும் ஆழ்பொருளும் தளும்பத் தளும்ப எவருக்கும் வாய்க்காத தருணங்களை ஒளியேற்றி தமிழின் மிகச் சிறந்த ஹைக்கூ கவிதைகளைத் தொடர்ந்து நமக்குத் தந்து கொண்டிருப்பவர். தமிழக அரசின் சமச்சீர் பாடத்திட்டக் குழுவில் இடம்பெற்று, பாடநூல்கள் உருவாக்கத்தில் முதன்மையான பங்காற்றியவர். குழந்தை மனம் வாய்த்த தாய்மைவிரல்கள் கொண்டு குழந்தை இலக்கியங்களை மிக அழகாகப் படைப்பவர்.

**'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்கிற நூலுக்காக 2021 க்கான பாலபுரஸ்கார் விருது பெறும் கவிஞர் மு. முருகேஷ் அவர்களுக்கு நற்சித்திரம் இதழ் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**

# கசந்த அடிகள்

கவிஞர் ஆசு



## ஒன்று

பேருந்து கூட்ட நெரிசலில்

சிறுவன் ஒருவன்

தோளில் புத்தகப் பையோடு

நெளிந்து குறுகுகிறான்

அவன் இறங்க வேண்டிய

நிறுத்தம் வந்துவிட்டது

பயணி ஒருவர்

அவன் அப்பாவின் சாயலுள்ளவர்

சொல்கிறார்

'கவனமாக இறங்கு மவனே,

தன் மகனாக அச்சிறுவனை நினைக்கையில்,

அச்சிறுவன் தோள்பை சுமக்கும்

புத்தகத்தில் அவர் வாழ்வும்

இருக்கக்கூடும்.

அதையே அவன் படிப்பதாய் எண்ணி

அவரின் வாழ்வில்

கசந்த அடிகள் அச்சிறுவன் மீது

விழாதிருக்க வேண்டிக்கொண்டார்.

## இரண்டு

அன்றிரவு அச்சிறுவனின்

கனவில்

அவன் சுமந்த புத்தகப்பை

படகாக ஒரு நதியில் மிதந்தது

மீண்டும்,

அன்று காலையில்

அவனுடன் பேருந்தில் பயணித்தவர்

அப்படகின் துடுப்பைச் செலுத்தினார்

அப்போது

அச்சிறுவனைக் கரை சேர்ப்பது

அவராய் இருந்தார்.



**நற்சித்திரம் இதழுக்காகக் கல்லூரி, பள்ளி மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. சிறுகதை, கவிதை, ஓவியங்கள் ஆகியன மாணவர் பக்கத்தில் வெளியிடப்படும்.**

**படைப்புகள் உங்களது சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.**

**'இது எனது சொந்தப் படைப்பு' எனக் குறிப்பிட்டு உங்களைப் பற்றிய விவரங்களுடன் கையொப்பம் இட்டு அனுப்பவும்.**

**படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: narchithiram@gmail.com**

# ஓல்காப்புகழ் தொல்காப்பியர்

(தமிழின் தடம் பதித்த சான்றோர்)

*மு. பிரபாகர்*

சில ஆயிரம் ஆண்டுகள் கடந்தும், அதன் புகழும், செழுமையும் குன்றாத தொல்காப்பியம், இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் என்றும் தமிழோடு செழித்து வாழும் மிகச்சிறந்த நூல், அதை எழுதியவரை முழுவதும் அடையாளம் காட்டுகிறது.

நூலின் ஆசிரியன் வேறு, நூல் வேறு என எண்ணும் நிலைமை நீங்கி விடுகிறது. அவ்வாசிரியரின் பண்பு, திறமை, அறிவு, பட்டறிவு எல்லாம் நூலின் வழி வெளிப்படுவதால், அந்த நூலை படிக்கும்போதே நாம் தொல்காப்பியன் எனும் பேராசானைப் பழகி மகிழ முடிகிறது. இதன் காரணமாகவே நூலாசிரியன் பெயரை நூலின் பெயராக அழைக்கும் பழக்கம் உலகெங்கும் காணப்படுகிறது.

ஷேக்ஸ்பியர் படித்தேன் என்று கூறுவதை நினைவில் கொள்ளலாம். அது போலவே தமிழிலும் இந்த வழக்கம் நெடுங்காலமாக உள்ள மரபே ஆகும். தொல்காப்பியன் எழுதிய நூலும் தொல்காப்பியன் என்றே அழைக்கப்பெற்றதை பனம்பாரனார் எழுதிய பாயிரம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியன் என்ற ஆசிரியன் பெயரே தொல்காப்பியம், தொல்காப்பியர் என்று மருவியிருக்கக்கூடும்.

தொல்காப்பியர் காலத்தில் நூல் என்றால் அது இலக்கண நூல் மட்டுமே. தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்கள் நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. அவருக்கு முன்னர்த் திகழ்ந்த தமிழகமும் கடல்கோள்களால் சுருங்கி இடம் மாறி அமைந்துவிட்டதாக நாம் அறிகிறோம். மக்களின் வாழ்வியல், மரபுகள் அனைத்தும் அந்தக் காலத்தில் மாற்றத்திற்குள்ளாயின. வடமொழியின் செல்வாக்கும் மரபுகளும் தமிழில், புகத் தொடங்கி இருந்தது.

இச்சூழலில் தமிழரின் பழைய வாழ்க்கை மரபுகள், நூல் மரபுகள் என அனைத்தையும் பின்வந்த தமிழ்ச் சந்ததிக்கு கொண்டு சேர்த்த பெருமையும் தொல்காப்பியத்துக்கே உண்டு. தமிழ் இலக்கியம், இலக்கணம், தமிழர் வாழ்க்கை, பண்பாடுகள் என அனைத்துத் தளங்களிலும் தொல்காப்பியம் செலுத்திய செல்வாக்கு போல் உலகத்தில் வேறு எந்த நூலும் காணப்படாத ஒன்றாகும். தொல்காப்பியம் எழுத்து, சொல் பொருள் என முப்பெரும் பிரிவுகள் உடையது. எழுத்து என்ற பெரும் பிரிவில் தனியாக எழுத்தின் வகைகள் எழுத்து பிறப்பு ,சொல்லில் வரும்போது எழுத்தின் நிலை, எழுத்துக்களின் உச்சரிப்பு நிலை, சொற்களில் எழுத்துகள் தொடர்ந்து நிற்கும் நிலைகள், சொற்கள் ஒன்றோடு ஒன்று இணையும்போது ஏற்படும் எழுத்து மாற்றங்கள் ஆகியன கூறப்படுகின்றன.

சொல் பற்றிய பெரும் பிரிவில் சொற்கள் தொடர்ந்து தொடர்களாக அமையும் முறை, சொற்கலின் வகைகள், உருபுகள் இன்னபிறவற்றைத் தமிழுக்கு சிறப்பாக அமைந்துருப்பதைப் பேசுகிறது. பொருளிலக்கணம் இலக்கிய ஆக்கம் பற்றியது. கருத்தும் வடிவமும் பற்றி விரிவாகப் பேசுகிறது மக்கள் வாழ்வு எப்படி இலக்கியமாக படைக்கப்படுகிறது என்பது இதில் விளக்கப்படுகிறது. எழுத்து, சொல்லிலக்கண நூல்கள் தனியாக உருவானதைப்போல பிற்காலத்தில் பொருள்

இலக்கணத்திற்குள் அமைந்திருந்த யாப்பு / செய்யுள் வடிவம் பற்றிய இலக்கணம், யாப்பு இலக்கணம் என்றும், உவமை , மெய்ப்பாடு, வண்ணம், வனப்பு போன்றவற்றை அணி இலக்கணம் என்றும் பொருளை அகமென்றும் புறமென்றும் தனியாக வளர்ந்தது.

இவ்வாறு தமிழ் இலக்கணம் ஐந்திலக்கணம் என பிரிக்கப்பட்டு, பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்திலக்கண நூல்கள் தோன்ற தொல்காப்பியமே வழியமைத்துக் கொடுத்தது.

பனம்பாரனார் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கர் என்றும், இவ்விருவர் உள்ளிட்ட பன்னிருவர் அகத்தியரிடம் பயின்றனர் என்பதும் செவிவழிச் செய்தி. அன்றுதொட்டு இன்றுவரை பனம்பாரனார் பாடிய பாயிரம் தொல்காப்பியம் போலவே, புலவர்களால் சிறப்பித்து போற்றப்படுகிறது. தொல்காப்பியம் அரங்கேறிய நிகழ்ச்சியை குறிக்கும் பனம்பாரனார், தாமும் உடனிருந்து அவ்வரங்கேற்றத்தில் கலந்து கொண்டதுடன், அந்நூலின் உள்ளும் புறமும் கற்றுத் தேர்ந்தேனென்கிறார். பாயிரத்தின் ஒவ்வொரு சொல்லும் தொல்காப்பிய நூலை முழுமையாக அறிமுகப்படுத்துகிறது. தொல்காப்பியத்தில் வரும் அடிப்படைக் கூறுகள் யாவும், பாயிரத்துடன் ஒத்துப் போவதால், பாயிரம் நுவலும் செய்திகள் முற்றிலும் பொருத்தமானவை என்ற எண்ணம் நம்முள் இயல்பாகத் தோன்றுகிறது.

தமிழ்மொழி பேசப்படும் நிலப்பகுதியை இந்நூல் முதலில் குறிக்கிறது. மொழிக்கு இலக்கணம் கூறுகையில், இது எந்த நிலத்தை அடிப்படையாகக்

கொண்டது என உணர்த்த வேண்டியது மிகவும் அவசியம். வடக்கே, வேங்கட மலையும் , தெற்கே குமரிக் குன்றமும் கிழக்கும் மேற்கும் கடலும் ஆகிய எல்லைக்குட்பட்ட நிலப்பகுதியே இந்நூல் செய்தற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாடாகும்.

குமரிக்குன்றம் , குமரியாறு முதலியன கடலால் கொள்ளப்பட்ட நிலப்பகுதி என்கிறார்கள் . குமரிக்கண்டம் முதல் கடற்கோளால் பெரும் பகுதி மறைந்ததென்றும் , குமரியாறு உள்ளிட்ட குன்றப் பகுதி தொல்காப்பியர் காலத்தில் இருந்தது என்றும் அந்த நிலப்பகுதிகளும் இரண்டாம் கடல்கோளால் கொள்ளப்பட்டது என்றும் தமிழறிஞர்கள் கூறுகிறார்கள்,

குமரிக்கடலும் குமரி முனையுமே எஞ்சி நின்றன. இவ்விரண்டு கடல்கோள்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தவரே தொல்காப்பியர் என்பது அறிஞர்கள் பலரது கருத்தாகும்.

பாண்டியர் தமிழை வளர்த்த அவையமே பின்னாளில் சங்கம் என்று அழைக்கப்பட்டது. இச்சங்கம் முதற்கடல் கோளுக்கு முன்பிருந்த காலத்தை முதற்சங்கம் என்றும் அதற்குப் பின்னிருந்த காலத்தை இரண்டாம் சங்கம் என்றும் இரண்டாம் கடல்கோளுக்குப் பிறபட்டதை மூன்றாம் சங்கம் என்றும் அழைத்தனர்.

முதல் கடல்கோளால் ஏற்பட்ட பேரிழப்பை நன்கு அறிந்தவரும், அனுபவித்தவருமாகிய தொல்காப்பியர், தமிழ் மொழி , இலக்கிய பண்பாட்டு மரபுகள் கடல்கோளால் அற்றுப்போய் விடாமல் காப்பாற்ற, முன்னைய வழக்குகளையும் நூல்களையும் நன்கு உணர்ந்து அவற்றைத் தொகுத்து பபிற்காலத்தவர்க்குத் தந்த பெருநூலே தொல்காப்பியம்.

இக்கடல்கோள்களைப் பற்றிக் கடைச் சங்க நூல்கள் பொதுவாகக் குறிப்பிடுகின்றன –

மலிதினை ஊர்ந்துதன் மண்கடல் வெளவலின்

மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்

புலியொடு வில்நீக்கிப புகழ்பொறித்த கிளர்கெண்டை

வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்’

- *கலி. 104*

‘பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்

குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு

தென்திசை ஆண்ட தென்னவன்’- *சிலம்பு - 11*

தெற்கு எல்லையாக சூட்ட வேண்டியதாயிற்று. இவைகளைத் தாண்டி, சிலப்பதிகாரம் சொல்லும் ஒரு வரலாறு –

‘அடியார்க்கு நல்லாரும், முதலூழி இறுதிக்கண்

தென்மதுரையகத்து முன்னைய முதற்சங்கப்

புலவர் களாகிய அகத்தியனாரும்

தொல்காப்பியரும் இருந்தமை பற்றியும்

பாண்டியருள் ஒருவனான சயாமாகீர்த்தியனாகிய

நிலந்தரு திருவிற்பாண்டியன் தொல்காப்பியம்

புலப்படுத்து இரீஇயினான் என்றும்

குறிப்பிடுகிறார்கள்.’ *(சிலம்பு 8).*

முதற்சங்கத்து இறுதிக்கண் அகத்தியானார், பனம்பாரனார், உடன் இருந்த காப்பியர், முதற் பெருங்கடல் கோளுக்குப் பிறகு தப்பி வந்து, நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்தில், தம் இலக்கண நூலை அரங்கேற்றித் தமிழ் மொழி அழியாமல் - இடையறவு படாமல் - பழைய மரபைக் காத்துப் புதியவை காலந்தோறும் பூத்து குலுங்க வழிவகுத்தார்.

*தொடரும்...*

# மிதக்கும் உலகம்

புத்தகப்பை

நூல் அறிமுகம்

திரண்டு விழும் மழைத்துளி போல மலர்ந்து மணக்கும் சிறு மலரைப் போல தண்ணீர்ப் பரப்பிலிருந்து பறக்க எத்தனித்து நீரில் ஆழும் மீனைப்போல மனித மனக்கிளை அமர்ந்து கூடு பின்னுபவை கவிதைகள்.

வாழ்வின் மீது தீராப் பற்றும் இயற்கையின் மீது எல்லையற்ற அன்பும் கொண்ட ஒருவர் என்ன செய்கிறார்? ஒன்று, கவிதையோடு உறவாடுகிறார் அல்லது, கவிதையாக ஒரு கணம் வாழ்ந்து சுவைக்கிறார். ஜப்பானியக் கவிதை உலகம் அப்படியாக ஒவ்வொரு பொழுதையும் கண்ணாரப் பார்த்துப் பார்த்து அமைதியில் கரைபவை. ஜப்பானியக் கவிதைகளை தமிழில் பலர் மொழிபெயர்த்திருந்தாலும் மிதக்கும் உலகம் கவிதை நூல் தனித்துவமானது.

ஜப்பானியக் கவிதை அமைதியை, தமிழ் அழகியலில் 'வனம்' வளர்த்த வண்ணத்துப்பூச்சியாய் நம் கண்களின் முன் பறக்கவிட்டிருக்கிறார்கள் கவிஞர் பா.இரவிக்குமாரும், கவிஞர் ப.கல்பனாவும்.

தனக்கெனத் தனித்துவமான கவிதை நடையைக் கொண்டவர்கள் இவர்கள். மிகச் சிறந்த கவிதை நூல்களை வழங்கியவர்கள். பனிபடர்ந்த கவிதைக் கரங்களால் செர்ரி பூக்களைப் பறித்து வந்து நமக்காக வழங்கியிருக்கிறார்கள். இவர்களின் கவிதை மனமே இந்நூலின் பலம்; இதுவே மற்ற நூல்களில் அமையாத தனிச்சிறப்பு.

இவர்களின் மொழிபெயர்ப்பின் சிறப்பிற்கு ஒரு கவிதை...

**ஷிகாவின் மீனவர்கள்**

**மீன் பிடிக்காமல்**

**தனிமையில் தவிக்கிறது**

**தண்ணீர்**

**ஆரோ விட்டுச்சென்ற**

**நாளில் இருந்து**

யமனோ ஒகுரா எனும் ஜப்பானிய கவிஞனின் நுட்பத்தையும் ஆழத்தையும் தமிழில் ஒரு இதழும் மடங்காமல் அப்படியே தந்திருக்கிறார்கள். யாரோ விட்டுச்சென்ற நாள் கவிதையின் கரையில் அப்படியே ஒரு மரக்கலம்போலக் கட்டப்பட்டிருக்கிறது. தண்ணீரின் தவிப்பை சிற்றலைகளின் வார்த்தைகளால் அழகாகச் சொல்லிவிடுகிறார்கள்

டோகுகவான் ஷோகன்களின் ஆட்சிக்காலத்தில்(கி.பி.1603-1867) அமைதியும் வளமும் நிறைந்த சூழலில், ஆன்ம நிறைவிற்கான தாகத்தோடும் இன்ப விழைவிற்கான விருப்பத்தோடும் ஜப்பானின் ஈடோ பகுதியைச் சார்ந்த மக்கள் உருவாக்கிய செழுமையான கலை மரபின் அடையாளங்களாகத் திகழ்பவை அக்காலத்திய கவிதைகளும், ஓவியங்களும். காலம் தன் திரையை மாற்றினாலும் யுகி யோ-யி எனும் இந்தக் கலை வடிவின் நினைவுச் சின்னங்களை அந்த மக்கள் நூல்வடிவில் காப்பாற்றி வந்துள்ளனர். ஜப்பானிய மக்களின் பண்பாட்டோடும் வாழ்வியலோடும் ஓர் அங்கமாகக் கலந்துவிட்ட இந்தக் கவிதைகளையும்

ஓவியங்களையும் தேர்ந்தெடுத்து அழகிய தாளில் மிகச்சிறந்த வடிவமைப்பில் வண்ணப்பக்கங்களில் ஓவியங்களுக்குத்தோதான அளவில் நூலை வடிவமைத்துத் தமிழில் தந்திருக்கிறார்கள். மிகச்சிரத்தை எடுத்து பரிசல் பதிப்பகம் இதனை வெளியிட்டுள்ளது. ஒரு பக்கம் ஓவியம் மறு பக்கம் கவிதை என்று நாம் வாசிக்கிறபோது கவிதை நம் மனதிற்குள் ஓவியமாகவும் ஓவியம் கவிதையாகவும் உருமாறி வடிவம் பலவாய்ப் பாவித்து இணைவாய்ப் பயணிப்பதை உணரலாம்.

இயற்கையைக் கொண்டாடுபவை இக்கவிதைகள். இயற்கையின் வழி வாழ்வின் ரகசியத்தை தரிசிப்பவை இவை. துயரும் தனிமையும் இயற்கை வழங்கிய கொடை என மனமுவந்து கோப்பையில் ஏந்துபவை.

எடுத்துக்காட்டாக இந்த நூலில் உள்ள இரு கவிதைகளைக் காணலாம்.

**இந்த உலகில்**
**இன்பங்களுக்குக்**
**குறைவில்லாத போது**
**எதிர்கால உலகில்**
**நான் பூச்சியாக இருந்தால் என்ன**
**பறவையாய் இருந்தால் என்ன**

*

**எப்பொழுதும் ஒருவருக்கு**
**வேகமாகவும்**
**அல்லது**
**மற்றவருக்கு மெதுவாகவும்**
**அடிக்கும்**
**கடிகாரம் இருக்கும்**
**நம் உலகில்**
**எவ்வளவு இனிமையானது**
**ஒன்றாகவே வாழ்வதும்**
**ஒன்றாகவே இறப்பதும்**

நெடுநல்வாடையில் தலைவியைப் பிரிந்த தலைவனின் பாசறையில் இரவை அளக்கும் மணல் கடிகாரம் ஜப்பானிய கவிதையிலும் துடித்துக் கொண்டிருப்பதால், நமக்குக் கூடுதலாய் இக்கவிதைகள் பிடித்து போவதற்கும் காரணமாக இருக்கலாம்.




நல்ல கவிதைகளைத் தேடித்தேடி வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களிடம் இருக்கவேண்டிய சிறப்பான கவிதை நூல் இது.

***மிதக்கும் உலகம்***

***ஜப்பானிய கவிதைகள் : மர அச்சு ஓவியங்களுடன்***

***தமிழில் : பா.இரவிக்குமார்- ப. கல்பனா***

***வெளியீடு : பரிசல் புத்தக நிலையம்***

***தொலைபேசி : 9382853646***

***விலை- 350/-***

**நூல் விமர்சனப்பகுதிக்கு நூல்கள் வரவேற்கப்படுகின்றன..**

**நூல்கள் (இரண்டு படிகள்) அனுப்பவேண்டிய முகவரி**



***Thamizhthadam Arakattalai***

***EB 404, Bollineni Hillside, Phase 2,***

***Perumbakkam,***

***Chennai - 600126***

# அறக்கட்டளை செய்தி

**தமிழ்த்தடம் அறக்கட்டளை, மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு, 26 நவ. 2020 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது.**

**நாங்கள் இதில் ஐந்து தடங்களில் பயணிக்க முடிவு செய்து, ஆதரவாய் நாம், கசடறக் கற்போம், சுயத்தைத் தேடி, ஐந்திணை காப்போம், தமிழாய் இணைவோம் என்று தொடக்கத்திலேயே திட்டங்களை வகுத்துக்கொண்டோம். கடந்த ஓராண்டில், பல்வேறு நலத்திட்டச் செயல்களில் எங்களால் இயன்ற அளவு ஈடுபட்டோம். அதில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமை அடைகிறோம்.**

**ஐந்திணை காப்போம்** நாட்டு மரக்கன்றுகள் நடுதல் (60)

**கசடற கற்போம்** புத்தக நிலையம், நீட் தேர்வு கட்டணமில்லா புத்தகம், கல்வி கட்டண உதவி (ரூ. 2 லட்சம் வழிகாட்டுதல்)

**சுயத்தை தேடி** சொற்சங்கம்

**ஆதரவாய் நாம்** பசிப்பிணி போக்குதல் (5,000 நபர்கள்)

அத்தியாவசிய பொருட்கள் (1,000 குடும்பங்கள்)

மருத்துவ உபகரணங்கள் (ரூ 25,000)





















**தமிழ்த்தடம் அறக்கட்டளை**

**அறக்கட்டளையுடன் இணைந்து பணியாற்ற, உதவ, மேலும் தெரிந்துகொள்ள...**

**வலைதளம்:** *www.thamizhthadam.org*
**மின்னஞ்சல்:** *thamizhthadamtrust@gmail.com*
**புலனம் மூலம் தொடர்பு கொள்ள:** *9342278788*

**நன்கொடை வழங்க**

வங்கி பெயர்: *Karur Vysya Bank*
வங்கி கணக்கு எண்: *1160 1150 0001 6159*
வங்கி கணக்க பெயர்: *Thamizhthadam Arakattalai*
*IfSC* குறியீடு: *KVBL0001160*
*GPay : 9342278788*

**வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!**